உ

வேலுமயிலும் துணை.

G. S. முனிசாமி நாயுடு, ராவண-R. கோவிந்தசாமி நாயுடு
S. G. கிட்டப்பா, V. P. ஜானகியம்மாள், S. R. கமலம்
M. M. சிதம்பரநாதன், T. M. மருதப்பா
P. U. சின்னப்பா

1

இவர்கள் பாடிவரும்

சத்தியம்தவரு உத்தமன் சரிதையென்னும்

சம்பூர்ண அரிச்சந்திரா

இவை

சென்னை முத்தியாலுப்பேட்டை

பால சந்தச் சரபக்கவி

V. A. தியாகராஜ செட்டியார் அவர்கள்

இயற்றியது.

V. R. எழுமலைப்பிள்ளை அவர்களிடம்

சகல உரிமையும் பெற்று

அநேக புதிய விஷயங்கள் சேர்த்தது.

அமரம்பேடு. இராஜரத்தின முதலியார்

மலர்மகள் விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பித்தது.

ரிஜிஸ்டர் காபிரைட்] 1954 [விலை அணா 8

23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை-1.

892 MTC
N54

ரிஜிஸ்டர் காபிரைட் அறிவிப்பு

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்: இந்த சத்தியந்தவறா உத்தமன் சரிதையாகிய "**சம்பூர்ண அரிச்சந்திரா**" என்னும் சரிதையை, V. A. தியாகராஜசெட்டியார் அவர்களால் எழுதி, V. R. ஏழுமலைப்பிள்ளை அவர்கள் அச்சிட்டு வெளியிட்டுள்ளதை சர்வ சுதந்தரத்துடன் ஷையாரிடம் கிரயத்திற்குப் பெற்று அச்சிட்டதுடன் இப்பதிப்பில் புதிதாக அநேக விஷயங்களைச் சேர்த்து என்பேரால் காபிரைட் செய்து வெளியிட்டுள்ளேன். ஆகையால் எனது உத்தரவின்றி யாரும் அச்சிடக்கூடாது என்பதைத் தெரிவித்திருக்கிறேன்.

இப்படிக்கு,

அ. இராஜரத்தின முதலியார்

மலர்மகள் விலாசம் பிரஸ்,

23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை.

நாடக நடிகர்கள்

1.	**அரிச்சந்திரன்**	...	திரிச்சங்குவின் மைந்தன்
2.	**சந்திரமதி**	....	அரிச்சந்திரனின் மனைவி
3.	**தேவதாசன்**	....	அரிச்சந்திரனின் புதல்வன்
4.	**சத்தியகீர்த்தி**	...	அரிச்சந்திரனின் மந்திரி
5.	**தேவேந்திரன்**	....	தேவர்கட்கரசன்
6.	**வசிஷ்டர்**	....	அரிச்சந்திரனின் குரு
7.	**கௌசிகர்**	...	ஓர் தவசிரேஷ்டர்
8.	**நாரதர்**	...	பிரமபுத்திரர்

மற்றும்

பாணப்பெண்கள், நக்ஷத்ரகன், காலகண்டய்யர், காலகண்டி, அசலாத்து மைந்தர்கள், தோட்டி, தோட்டிச்சி, தேவர்கள், காசிராஜன், மந்திரி, சேனைகள், காவலர், சேவகன், பரமசிவன், குடிகள், முதலானோர்கள்.

உ

வேலுமயிலும் துணை

சகல நாடக கம்பெனியாராலும்

நடத்திவருகின்ற

சம்பூர்ண அரிச்சந்திரா

விநாயகர் துதி வெண்பா

கங்காதர னளித்த கந்தனுக்கு முன்னுதித்த
ஐங்கரனே வந்தெனக் கருள் தருவாய்—மங்களமாய்
சம்பூர்ண அரிச்சந்திரா சரித்திரந் தனையெழுத
நம்பினேன் நினைவில்வா நான்.

ஸீன்-1 இடம்-இந்திரன் தர்பார்

நடிகர்: இந்திரன், மந்திரி, கௌசிகர், வசிஷ்டர், தேவர்கள்.

இந்திரன் சபைக்கு வரும் தரு

(வேலாயுதக் குமாரா என்ற மெட்டு)

பல்லவி

ஐயா பழனிமலை ஆண்டவனே (ஐயா)

அநுபல்லவி

எனை ஆதரித்திட நீதமாய் மலர்ப் பாதனே கவி
ஓதினேன் முருகையா (ஐயா)

சரணங்கள்

தூய்யா உனை ஸ்ரீராமு
கையா தினம் துதித்தேன் உன்
துடிக்கும் மயிலில் நடித்து ஏறியே
படிக்கும் கவியை முடிக்க வருவாய் (ஐ)

தொகையரு

தந்தைக்குப் பிரணவம் முக்தியே புகன்றவா
தாஷ்டீக மான குருவே
வந்தோர் நாரதரின் சொற்கேட்டு வள்ளியை
வனந்தனில் மணந்த உருவே

ஷெடி சரணம் எடுப்பு

சென்னை நகரி லெங்கும்
சாபக் கவிகள் பொங்கும் மிக

சிறுவனும் தியாக ராஜன் சொல்லிய
செந்தமிழினைக் கந்தனே காரும் (ஐ)

மந்திரிகள் வசனம்:—பிரபு! நமஸ்கரிக்கின்றோம்.

இந்திரன் வ-ம்:—கல்யாண்! மந்திரிகாள்! அமர்வீர். நமது சபையில் முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், முனிவர்களும், சித்தர் மற்றும் பல பக்தர்களும் வந்திருக்கின்றார்களா?

மந். வ-ம்:—வச்சிரப்படை யேந்தும் கையரே! தாங்கள் தெரிவித்தவாறே அனைவரும் அளவிலா க்ஷேமங்களோடு ஆகமவிதிப்படி அவரவர்கள் யாகங்களைச் செவ்வனே முடித்து வருகிறார்கள். அஷ்டதிக்குப் பாலகர்களும் அவரவர் தொழிலைப் பிழையின்றி நடத்தி வருகின்றார்கள்.

இந். வ-ம்:—சந்தோஷம். அசுரர்கள் யாவர்களும் நமது தேவர்களுக்குத் தலைவணங்கி ஏவல்புரிந்து வருகின்றார்களா?

மந். வ-ம்:—அமரர்க்கரசே! தங்களின் மனநோக்கப்படியே ஒன்றும் அட்டியின்றி நடந்துக்கொள்ளுகிறார்களரசே.

இந். வ-ம்:—மந்திரி! ஆயினும் இதுவனைத்தும் நமது குருவாகிய பிரகஸ்பதியின் ஆசீர்வாதமென நம்புகிறேன்.

மந். வ-ம்:—ஆம் அரசே! அதற்கென்ன சந்தேகமா?

இந்திரன் விருத்தம் (மால்கோஷ்)

என்மனதிற் கிசைந்த எழில்மிகும் சபையுள்ளோரே
தன்மையாய்த் தரணிதன்னில் தானதர் மங்கள் செய்து
நன்மையாய் வாழ்ந்துபொய்யை நாவினில் பேசிடாமல்
உண்மையா யிருப்போருண்டோ உரைத்திட ருரைத்திடீரே.

இந். வ-ம்:—முற்றுந் துறந்த முனிவர்களே! சித்தர்களே! பக்தர்களே! நாரத பிரம்மமே! இப்பூவுலகில் சத்தியம் தவறாமல், மன்னுயிரைத் தன்னுயிர்போல் பாவித்து, ஏகபத்தினி விரதனாக விளங்குபவன் யாராயினும் உண்டோ? அவ்விதமிருப்பின் தெரிந்தவர்கள் இச்சபையில் எடுத்துரைக்கலாம்.

[இதற்குள் வசிஷ்டர் எழுந்திருந்து]

வசிஷ்டர் வ-ம்: புரந்தரா! அதாவது,

வசிஷ்டர் தரு

(மார்க்கத்தில் கண்ட கனி என்ற மெட்டு)

பூவுலகில் தர்ம தானங்களைச்செய்து
பொய்யுரையா திருப்போன் எங்கும்
மேவும் ரவிகுலம் தன்னி லுதித்திட்ட
மிகு புண்யசாலி யென்போன் (பூ)

நீதி தவருமல் ராஜரீகம் செய்யும்
நாகரீக முள்ளவன் அந்த
பாதிமதி யணிந்த சிவனைத் தினம்
பக்தியாய்ப் பூசிப்பவன் (பூ)
எந்தனின் சீடன் அயோத்தி நகருக்கு
ஈடில்லா ராஜனையா சொன்னேன்
அந்த திரிச்சங்கு யீன்ற குமாரனும்
அரிச்சந்திரன் தானையா (பூ)

வசி. வ-ம்:-அமரர்க்கரசே! தாங்கள் வினவிய சகல குணங்களும் அமைந்த அரசன் அவன் ஒருவனைத் தவிர வேறில்லை.

இந். வ-ம்:-பேஷ் முனிவரே! அவ்வளவு நீதி வழுவாது ராஜ்ய பரிபாலனம் புரிபவனும், இவ்வுலகில் ஒருவன் இருக்கின்ருனு? (தேவர்களைப் பார்த்து) சபையோர்களே! யான் கேட்ட கேள்விக்கு இவ்வசிஷ்டமுனிவர் சரியான விடை யளித்ததினுல் எல்லோரும் இவருக்கு வந்தனம் புரியுங்கள்.

சபையோர்கள் வ-ம்:-மகா சந்தோஷம். வசிஷ்டரே! சத்தியம்பிசகா அதி உத்தம சீடனைப் பெற்ற உமக்கு யாங்கள் வந்தனம் புரிகின்ருேம். [தேவர்கள் வந்தனம் புரிகின்ருர்கள், விஸ்வாமித்திரர் கோபமுடன் எழுந்து]

விஸ்வாமித்திரன் விருத்தம் (மோகனம்)

புலியில்லாக் கானகத்தில் நரிராஜ னென்பதைப்போல்
மெலிவுட னுனமட்டும் மகிழ்வுடன் சபையிலின்று
பொலிவுட னுரைக்கவந்த புளுகனும் வசிஷ்டனுக்கு
தலைதனைக் குனியச்சொன்ன சேதியை வுணர்த்துவீரே.

விஸ். வ-ம்:-பேஷ்! பேஷ்! தங்களின் நீதி நியாயங்கள் நன்ருகயிருக்கிறது. 'புலி யில்லாக் காட்டில் நரியே அரசன்' என உரைப்பதுபோலும். 'ஆலை யில்லா ஊரில் இலுப்பைப்பூ சர்க்கரை' என்பதுபோலும் இருக்கிறது. அதுவும் தவிர, அந்த அரிச்சந்திரனே மிகவும் கொடியவன், பொய்யையே பூஷணமாகப் பூண்டவன், அற்பன், பத்தினிப் பெண்களைப் பலாத்காரமாய்ப் புணர்வோன், இரப்பவர்க்கு ஈயா லோபி, நிர்மூடன், தெய்வபக்தி இல்லாதவன், சத்தியத்தைப் பிசகி நடக்கும் சண்டாளன், குரூர குணமுள்ள கொடிய துரோகி, இவ்விதமான துர்நடத்தையுள்ளவனை, 'காக்கையின் குஞ்சு தன்குஞ்சு பொன்குஞ்சு' என்பதைப்போல் இந்த வசிஷ்டன் தனக்கு அவ்வரிச்சந்திரன் சீடனென்னும் அபிமானத்தைக்கொண்டு பினத்துகிருன். அதற்காக நாங்கள் இவனுக்குப் பணிய வேணுமா?

வசிஷ்டர் விருத்தம் (ஆனந்தபைரவி)

அலைகடல் பொங்கினாலு மவனிதா னழிந்திட்டாலும்
நிலைதப்பி ரவியுந்திங்கள் நெடியகோள் பிசகினாலும்
கலைகளே பொய்த்திட்டாலுங் கயிலைமேல் கிழானாலும்
புலையிலா வரிச்சந்திரன்றான் பொய்சொல்லாப் புனிதன்காணே.

வ-ம்:-ஏ கௌசிகா! மேற்சொன்ன எனது சீடனாகிய சத்யநெறி தவறாத அரிச்சந்திரன், அதி உத்தமனென்பதற்கு ஆக்ஷேபணையில்லை. இதுவே உண்மை, இதுவே சத்தியம்.

இந்.வ-ம்:-முனிவர்களே! எதற்காக சண்டையிடுகின்றீர்; உங்களுக்கு இத்தகைய கோபம் வேண்டாம். உங்களுக்குள் தோற்றும் கருத்தை வெளியிடுங்கள்.

வசி. வ-ம்:-புரந்தரா! இம்முனிவன் அவ்வரிச்சந்திரனைப் பொய்யனாக்கும் பக்ஷத்தில் யான் என் தவவேடத்தைக் கலைத்து, முடியைச் சிறைத்தெறிந்து, என் சிரமீது மதுகுடத்தைத் தாங்கி தெற்குத்திசைநோக்கிச் செல்வேன், இதுவே சத்யம்.

இந். வ-ம்:-கௌசிகமுனிவரே! தங்களின் கொள்கை என்ன?

விஸ். வ-ம்:-சுரேந்திரா! அவ்வரிச்சந்திரனை பொய் பேசச்செய்து உங்களுக்கு நேரில் காண்பிக்கின்றேன். தவறுவேனாகில் என்னுடைய தவத்தில் பாதி அவனுக்களித்து இவ்வசிஷ்டனை வணங்கிப் பணிவேன். ஆயினும் இவ்விஷயத்தை யாரும் அவனுக்குத் தெரிவியாதிருக்கும்படி திட்டம் புரியவேண்டும்.

இந். வ-ம்: முனிவரே! சரி தங்களபிப்பிராயப்படி செய்கிறேன்.

[எல்லோரும் போகிறார்கள்]

சீன்-2.] [இடம்-அரிச்சந்திரன் தர்பார்

நடிகர்:- அரிச்சந்திரன், சத்தியகீர்த்தி, விஸ்வாமித்திரர், சேவகன், குடிகள் முதலானோர்.

[அரிச்சந்திரன் சபைக்கு விஸ்வாமித்திரர் வருகிறார்]

அரிச்சந்திரன் தரு

(தசரத ராஜகுமாரா என்ற மெட்டு)

தரணிபுகழு மகாமுனியே தவமணியே
செங்கனியே அருளினியே (த)

வாசித்த வைராக்ய வன்ன மேலே ஒன்று
வந்த விபரமதை வழுத்திடீர் நன்று
திறமுடனே யான் தெரிந்திட வின்று
திவ்யகௌசிக குருநாதா இன்னும் வாதா
மலர்ப் பாதா மொழி வேதா (த)

விஸ்வாமித்திரர் தரு

அரசமன்னர்கள் மெச்சும் அயோத்தியில் வாழும்
அரிச்சந்திரா யானென்று அறிவிப்பேன் கேளும்
கிரமமாய் யாகம் செய்ய கீர்த்தியாய் நாளும்
கனமுடன் பொன்னை வேண்டி நானே வந்தேனே (அ)

அரிச்சந்திரன் தரு

பொன்னது எவ்வளவு புகழுடன் வேணும்
புகலுவீர் இப்பொழுது புண்யரே தானும்
உன்மன திஷ்டம்போல வளிப்பேன்காண் யானும்
உத்தமரே உரைப்பீர் நீரே தகிபாரே
பொன்னைத் தாரேன் கௌசிகரே (அ)

விஸ்வாமித்திரர் தரு

ஆனைமீதேறி ஒரு கவணை கொண்டு
அடித்தாலது போகும் அளவதைக் கண்டு
வினையமா யவ்வளவு வேணும் பொன்னின்று
விருப்பமுடனே யளிப்பாயோ மறுப்பாயோ
போவென் பாயே தருவாயோ (அ)

அரி. வ-ம்:—முனிபுங்கவரே! தங்களின் மனவிருப்பம்போல் நீவிர் கோரிய பொன்னைத் தருகிறேன், வாங்கிக்கொள்ளுங்கள் அப்பா சத்தியகீர்த்தி! இவர் செய்யும் யாகத்திற்காகக் கோரும் பொன்னை இவரிடம் கொடுத்தனுப்புவாய்.

விஸ். வ-ம்:—அரிச்சந்திரா! அந்தப் பொன்னை உன்னிடத்திலேயே வைத்துக்கொள். பிறகு யான் வந்து பெற்றுக் கொள்கிறேன்.

அரி. வ-ம்:-நல்லது சுவாமி! தமதிஷ்டம்போல் செய்யுங்கள்.

[விஸ்வாமித்திரர் பேசுகிறார் சேவகன் வருகிறான்]

சே. வ-ம்:-அரசே! குடிகள் வந்திருக்கின்றனர்.

அரி. வ-ம்:-என்ன காரணம் வரச்சொல்?

[குடிகள் வருகிறார்கள்]

குடி. வ-ம்:-அரசே! வனமிருகங்கள் ஊருக்குள் புகுந்து பயிர்களை அழித்து நாசம் செய்கின்றது. தாங்கள் அவைகளை வரவொட்டாமல் தடுத்து எங்களைக் காப்பாற்றவேண்டும்.

அரி. வ-ம்: குடிகாள்! அஞ்சாதீர்! இதோ யான் வேட்டைக்குச் சென்று அவைகளை இம்சை புரிந்து வருகிறேன். மந்திரி! நீ சென்று வேடர் வில்லியரை அழைத்துவருவாய்.

[மந்திரி பேசுகிறான்]

சீன்-3] [இடம்-காடு

நடிகர்:-அரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாசன், சத்தியகீர்த்தி, சேனை, பிரதானியர் முதலானோர்.

அரிச்சந்திரன் வேட்டையாடுதல்

(அப்படியே செய்துவருவேன் என்றமெட்டு)

பல்லவி

வில்தனை எடுத்து அடிப்பீர் பொல்லா
விலங்கினங்களின்றோடே அறவே ஒழிந்திடவே (வி)

அநுபல்லவி

தொல்லைக்குள் ளாக்கிவிட்டீர் தொகுத்த பிரஜைகளை
பொல்லாத கானகத்தில் போயொளித்தாலும் விடாதீர் (வி)

[அரிச்சந்திரன் வேட்டையாடி களைத்து]

அரி. வ-ம்:—சத்தியகீர்த்தி! வனத்தின் மிருகங்களையெல்லாம் வதைத்துவிட்டோம். ஆயினும் தற்போது அளவிலாத நித்திரை வருகின்றமையால் சற்றுநேரம் இவ்விடமே அயர்ந்திருக்கின்றேன்.

[நித்திரை செய்துக்கொண்டே வாய்குளறி எழுந்திருக்கின்றான்.]

அரி. வ-ம்:-மந்திரி என்ன இது? இத்தகைய சொற்பனம் காணுதற்கு காரணமென்னவென்று தோன்றவில்லையே, ஆஹா! அதை நினைக்க என் மனது ஒருவாறு வாதிக்கின்றதே?

சத். வ-ம்:-அரசே! என்ன சொற்பனம் அதை தெரிவியுங்கள்; இவ்வடியேனுக்கு தெரிந்தவரையில் அதின் விபரங்களைக் கூறுகிறேன்.

அரிச்சந்திரன் அகவல்

புத்தியே யுரைக்கும் சத்திய கீர்த்தி
இத்தகி யானே இளைத்துமே தரணியில்
நித்திரை புரிய நிகழ்ந்தொரு கினவை
பக்தனே கண்டேன் பகருவேன் நீதான்
கவனமாய்க் கேட்டு கடுகியே யுரைப்பாய்
மேவியே ஐந்து மாதரை மணந்ததில்
அந்தணர்க் கொருத்தியை அகமகிழ்ந்தீந்தேன்
பிந்தி இன்னொருத்தியும் பின்பற் றிபோனாள்
இன்னொரு மாது இயல்புடன் சென்று
கண்ணினை இழந்தாள் காதகி யவளும்
பணியணி இழந்து பகைத்தெனை ஒருத்தி
துணிவுடன் போனாள் தோகையாள் சென்றபின்
மற்றொரு மாது மகிழ்ந்தெனை விடாது
பற்றியே இருந்தாள் பழிஏதோ அறியேன்.

அரி. வ-ம்:-மந்திரி! இதை நினைக்க நினைக்க என் மனது நடுங்குகிறது; இதின் விபரந்தை எனக்கு அறிவிப்பாயப்பா.

சத். வ-ம்:-அரசே! நீர் அந்தணர்க்களித்த முதல் மாது உமது ராஜ்யம், அவளுடன் தொடர்ந்துச்சென்ற மற்றொரு மாது உமது நிதி, 3-வது மாது உமது மனைவி, 4-வது மாது உமது மைந்தன், இவர்களெல்லாம் உம்மைப் பிரிந்தாலும், உம்மைப் பிரியாதிருந்த 5-வது மாது உமது சத்தியமேயாகும் அரசே.

அரி. வ-ம்:-மந்திரி! விதியிருப்பின் தவறப்போவதில்லை. யாதுக்கும் ஈசன்தான் துணை வா நம் நகருக்குச் செல்லலாம்.

[சகலரும் போகிறார்கள்]

சீன்-4] [இடம்-அரிச்சந்திரன் தர்பார்

நடிகர்:- அரிச்சந்திரன், பாணப்பெண்கள், விஸ்வாமித்திரர், சத்தியகீர்த்தி, சந்திரமதி, தேவதாசன் முதலானோர்.

[பாணப்பெண்கள் வருகிறார்கள்]

பாணப்பெண்கள் தரு

(உஸ்மத்தோரா என்ற மெட்டு)

ராஜ ராஜ ராஜ பூபா நங்கையர்கள் வந்தனம்
நேசனே அரிச்சந்திர நேமனேயாம் தந்தனம்
சத்தியம் தவறிடாத சாந்தகுண சீலரே
நித்தியுமை நாடிவந்தோம் நாகரீக தோளரே
மன்னா யெங்கள் காதல் தீரும் மதிநயன் மருகனே
கன்னியர்கள் உன்னைநாடி கழல்பணிந்தோம் கண்ணயனே

அரி. வ-ம்:- (அரிச்சந்திரன் செவியை மூடிக்கொண்டு) சிவ சிவா! இதுவும் உனது திருவருளா.

[சேவகன் பாணப்பெண்களை அடித்து துரத்துகின்றான். பிறகு விஸ்வாமித்திரர் அப்பெண்களை அழைத்துக் கொண்டு கோபத்துடன் வருகிறார்.]

விஸ்வாமித்திரர் ஓரடி

அட அரிச்சந்திரா சீச்சீ அரிச்சந்திரா உந்தன்
அகமோடா இவர்களை அவதூறு செய்தாய் நீயும் (அ)
திடமுடன் ரவிகுலந் தனிலே பிறந்திருந்தும்
தகாத காரியந்தனைத் தைரியமாகச் செய்தாய் (அ)
அட-ஏது என்னிடமிந்த சூது
செய்வதுனக் கடாது எண்ணுவாய்நீ இப்போது
உந்தனைப்போல ஏது
கோதுடைய மன்னவர்கள் குவலயம் தன்னிலில்லை
கொஞ்சமேனும் எண்ணாமல் மிஞ்சியே அடித்தாயோடா (அ)

அரி. வ-ம்:-சுவாமி! வந்தனம் கோபியாதீர்.

விஸ். வ-ம்: சட் சண்டாளா! [முடியை எட்டி உதைக்கிருர்]

அரி. வ-ம்:-சுவாமி! முடியை யுதைத்தபோதே உமது பாத தூளிகள் இப்பாதகன் சிரத்தில் பட்டவுடனே செய்த பழி பாவங்களெல்லாம் பறந்தோடிவிட்டன. ஆதலால் தங்களின்,

அரிச்சந்திரன் கண்ணிகள்

(நாதன் வாராததாலே என்ற மெட்டு)

பாதம் நொந்ததோவையா பக்தியிற்சிறந்தமெய்யா
ஓதுவீரெனக்குத் தய்யா உத்தமமகாமுனியையா (பா)
சுவாமியுன் பாததூளியாலே தன்யனுனேன் புவிமேலே
நேமி இப்பஞ்சையினுலே நோக உதைத்தீர்மென்மேலே (பா)

[அரிச்சந்திரன் விஸ்வாமித்திரரின் காலைப் பிடிக்கின்ருன் விஸ்வாமித்திரர் காலை உதறிக்கொண்டு]

விஸ். வ-ம்:-அடே துஷ்டா! இப்பெண்களை ஏனடித்தாய்?

அரி. வ-ம்:-சுவாமி! இம்மாதர்களை யானடிக்கவில்லை. தகாத வார்த்தைகளாடி என்னைக் கூட அழைத்ததால் அச்செய்தி யுணர்ந்த சேவகன் அடித்துத் துரத்தினுன் சுவாமி.

விஸ். வ-ம்:-அடே! இப்பொழுதாவது என்ன தெரிவிக்கிருய்?

அரி. வ-ம்:-சுவாமி! உமது அடியேனுகிய யான் இத்தகைய துர்நடத்தையி வீடுபடேன். ஆதலால் தாங்கள் இதைத்தவிர வேறெது கேட்கினும் தடையின்றி அளிப்பேன் ஐயனே.

விஸ். வ-ம்:-அப்படியா! நான் கேட்பதை இல்லையென்னுது தருவாயோ?

அரி. வ-ம்:-தருகிறேன் சுவாமி!

விஸ். வ-ம்:-உண்மையாகவா தருவாய்?

அரி. வ-ம்:-சத்தியமாகத் தருகின்றேன் முனிநாதா.

விஸ். வ-ம்:-சரி! உன் செங்கோலும் இராஜ்யமும் எனக்குத்தருவாய்.

அரி. வ-ம்:-அப்படியே கொடுத்தேன் ஐயனே.

விஸ். வ-ம்:-அரிச்சந்திரா! வாயினுல் சொன்னுல் நம்பேன், எனக்கு உன் ராஜ்யம் சொந்தமென்று தாரை வார்த்துக் கொடு.

அரி. வ-ம்:-அப்படியே கொடுத்தேன் ஐயனே.

விஸ். வ-ம்: சரி, அரிச்சந்திரா! உன் ராஜ்யம் யாவற்றையும் யான் ஒப்புக்கொண்டேன், முன்பு நான் உன்னிடம் அடைக்கலமாய் வைத்துப்போன பொருளை இப்பொழுது கொடு.

அரி. வ-ம்:-சுவாமி! இப்பொழுது என்னிடத்தில் கால்காசும் கிடையாது. ஆதலால் ஒரு தாகரை என்னுடன் அனுப்பினுல் யான் காசிநகர்சென்று தங்களின் கடனைக் கொடுக்கின்றேன்.

விஸ். வ-ம்:—ஆனால், நீங்கள் சென்று சரயூநதிக்கருகில் கொஞ்சம் தாமதித்திருங்கள்; நான் ஆள் ஒன்று அனுப்புகிறேன்; அவரை அழைத்துப்போய் 4-நாள் தவணைக்குள் பொன்னைக் கொடுத்தனுப்புவாய்.

அரி. வ-ம்:-தவசிரேஷ்டரே! தங்களின் ஆசீர்வாதத்தால் யாங்கள்,

அரிச்சந்திரன் தரு

(அடைக்கலமே என்ற மெட்டு)

சென்றுமேவாரோம் சென்றுமேவாரோம்
தவத்திலுயர்ந்த மகா கௌசிகமாமுனியே (செ)

அண்ணலே உந்தனின் அருள்வாக்குபோல
அனுப்புமாளிடத்தில் பொன் னளிப்பேனிவ்வேளை
சன்மார்க்கமுனிவரே உன்மொழியாலே
சந்திரமதியும் மகன் யானுமின்னுளே (செ)

[எல்லோரும் போகிறார்கள்]

சீன்-5] [இடம்-சரயுநதிக்குச் சமீபம்

நடிகர்:-நக்ஷத்திரதரகன், அரிச்சந்திரன், சத்தியகீர்த்தி, சந்திரமதி, தேவதாசன்

[அரிச்சந்திரனுடன் எல்லோரு மிருக்கின்றார்கள்; நக்ஷத்ரதரகன் வருகிறான்]

நக்ஷ. வ-ம்:-கௌசிகர் சொன்ன அரிச்சந்திரன் என்பவன் நீதானோ?

அரி. வ-ம்:-ஆம், ஐயனே.

நக்ஷ. வ-ம்:-ஆமாம், பொன்னை எப்போது கொடுக்கப்போகின்றாய்?

அரி. வ-ம்:-நாற்பத்தெட்டுநாளில் கொடுத்தனுப்பிவிடுவேன்.

நக்ஷ. வ-ம்:-ஆம் பொன்னை கொடுக்கும்வரையில் என்னைச் சரிவரக் காப்பாற்றி அனுப்ப உன்னால் முடியுமா?

அரி. வ-ம்:-சுவாமி! அதற்கொன்றும் அஞ்சாதீர்.

நக்ஷ. வ-ம்:-சரி வாருங்கள் செல்லலாம்.

[நக்ஷத்ரதரகன் கொஞ்சதூரம் சென்று பசியின் களையால் சாய்கின்றான்]

நக்ஷ. வ-ம்:-ஆ! பசியின் கோரம் என்னால் தாங்க முடியவில்லை என்ன செய்வேன்.

சத். வ-ம்:-ஐயனே! இதோ சென்று கனிவர்க்கங்களைச் சிலது கொண்டுவருகிறேன் அதை புசித்து தங்களின் பசியை தணித்துக்கொள்வீர்.

[சத்தியகீர்த்தி பழவர்க்கமும் ஜலமும் கொண்டுவந்துதர நக்ஷத்ரதாகன் அதை புசிக்கின்முன்]

நக்ஷ. வ-ம்:-அப்பா! கனியைப் புசித்து ஜலத்தை அருந்தினேன். ஆயினும், இப்போது என்றும் வாராத நித்திரை வருகிறது; சற்று சயனிக்கிறேன்; எனக்குக் கொஞ்சம் தாலாட்டுங்கள்.

[நக்ஷத்ரதாகன் சயனிக்கிமுன் இதற்குள் பூதங்கள் வருகிறது]

பூத. வ-ம்:-அடே பாப்பாரப்பயலே! உன்னை விடுகிறதில்லை. இதோ எடுத்து விழுங்குகிறோம் பார்.

[நக்ஷத்திர தாகன் அலறி விழுகிறு கு.]

அரி. வ-ம்:-ஏ பூதங்களே! நீங்கள் செல்லுகின்றீர்களா? இல்லையா?

பூத. வ-ம்:-நாங்கள் போகமாட்டோம். நீதான் என்ன செய்வாய்?

அரி. வ-ம்.-நான் சத்தியநெறி பிசகா தவனாயின் நாங்கள் இதைவிட்டுச் செல்லும்வரை உங்கள் காம் அசையாது இருக்கவேண்டும்.

[பூதங்கள் போகிறது, எல்லோரும் போகிறார்கள்]

தேவதாசன் தரு

(இராகம்-துவாஜத்தி, தாளம்-ஆதி)

எப்படி நான் நடப்பேன் இம்மணல் மீதில் (எப்)

அப்பப்பா எந்தனிட அடி நுனி யெரியுதே
அருமையா யென்னைப்பெற்ற அன்னை தந்தையேபாரீர் (எ)

நாவு முலர்ந்தெந்தன் நடையும் சோருதம்மா
நடக்கவினிமேலென்றால் நாட்டம்போ தாதுசும்மா (எ)

கொப்பளிக்குதே என்றன் குளிர்ந்தபா தங்கள்பாரீர்
கொடுமை இதைச்சகிக்கக் கூடவில்லையேபாரீர் (எ)

தேவ. வ-ம்:-தாயே! கல்லிலும் முள்ளிலும் நடந்து எனது பாதங்கள் மிகவும் வலிக்கின்றதே; ஆ அம்மணி!

[களைத்துவிழும் மகனை சந்திரமதி பிடித்துக்கொள்கிறாள்]

சந். வ-ம்:-மலரினுமினிய பாதத்தையுடைய மகனே! நமது ராஜ்யத்தில் எவ்வளவோ சுகபோகங்களை யெல்லாம் விடுத்து இக்காட்டில் இவ்விதமாக அலறியழ அந்த அயனின் அமைப்பேயொழிய வேறில்லையப்பா கண்மணி!

[எல்லோரும் போகிறார்கள்]

சீன்-6] [இடம்-வேறு காடு

நடிகர்:-தரகன், அரிச்சந்திரன், சந்திரமதி, தேவதாசன், சத்தியகீர்த்தி

நக்ஷ. வ-ம்:-அரிச்சந்திரா! இனி என்னால் நடக்கமுடியாது; என் கால்களெல்லாம் நோகிறது; எனக்குப் பொன்னும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம்; நான் போகிறேன்.

[நக்ஷத்ர தரகன் போக திரும்புகிறான் அரிச்சந்திரன் அவனை பிடித்துக்கொண்டு]

அரி. வ-ம்:-சுவாமி! அடியார்கள்மீது கோபிக்கப்படாது, தங்களின் கால்வலி தீரும்பொருட்டு, என் தோளின்மீது அமர்ந்துக் கொள்ளுங்கள், அடியேன் எடுத்துச் செல்கிறேன்.

[நக்ஷத்ர தரகனை அரிச்சந்திரன் தூக்கிச் செல்கிறான்]

நக்ஷ. வ-ம்:-(பயந்து) அரிச்சந்திரா! எங்கப்பாணை, நான் வரவே மாட்டேன், அதோ பார் காடுபற்றி யெரிகிறது.

[ஒருவர்க்கொருவர் தர்க்கித்துப்பேசி பிறகு சந்திரமதி அக்கினியருகில் வந்து]

சந்திரமதி விருத்தம் (நாதநாமக்கிரியை)

மறைவழி கடந்தோமாகில் வரும்விருந் திகழ்ந்தோமாகில்
முறைவழி செய்யோமாகில் மூப்பரை இகழ்ந்தோமாகில்
பிறர்மனை நயந்தோமாகில் பிறர்தமை வைதோமாகில்
குறைசில செய்தோமாகில் கொல்லெனைக் கனலேயீயும்.

[அக்கினி அணைந்துவிட எல்லோரும் போகிறார்கள்]

சீன்-7] [இடம்-காசிநகர்

நடிகர்:-சந்திரமதி, அரிச்சந்திரன், நக்ஷத்ரதரகன், தேவதாசன், சத்தியகீர்த்தி, காலகண்டையர்.

அரி. வ-ம்:-மதிதயனின் மனக்குறையை யகற்ற மதலையாய் அவதரித்த மாணிக்கமே! இதோ எதிரில் தெரிகின்றதே அவ்வாலயத்தின் ஜோதிப் பிரகாசத்தைக் கண்ணுற்றனையா? ஆதலால்,

அரிச்சந்திரன் தரு

இராகம்-தோடி, தாளம்-ஆதி

காங்குவிப்பாய் மயிலே இதோ காசி
காணுதுபார் குயிலே (க)
பிரமனன்றெழுதிய பெருவிதிகருமங்கள்
பிந்தித்தொடாநாளும் பெருமான்வாழ்நகர் (க)
நால்வகை யோனிகளில் நாட்டிலெழுதோற்றமாய்
நமன்வாதைக்காக நாடிப்பிறந்ததுன்பம் (க)

காலுமேற்றலைகீழாய்
கண்டவர் மகிழ்வுற
கொண்டவர் துயரற
கொற்றவன் யிறைவ
பெற்றவன் தெரிபரி

கருதிநின்றுலுமங்க
அண்டவர் பதவிபெற
எண்டிசை புகழ்தர
னூற்றவனரிதவம்
சுத்தன்வாழ் நகரிதோ (க)

[இதற்குள் அத்தாகன்]

நக்ஷ. வ-ம்:-அடே பாவி! நீ நன்றாயிருப்பாயா? கடனை கொடுக்கிறேன் என்று இவ்வளவுதூரம் அழைத்து வந்துவிட்டாயே? இப்போது அதெல்லாம் முடியாது, உனது குருவாணையாக ரொக்கத்தைக் கொடுக்காமல் அடியெடுத்து வைக்கப்படாது. இதோ பார் என்ன இது தெரியுமா?

[அரிச்சந்திரனின் காத்தில் கிட்டியைப் பூட்டுகிறான்]

அரி. வ-ம்:-ஆ பரமேசா! இந்த நக்ஷத்ரதாகர் செய்யும் கொடுமை என்னால் சகிக்க முடியவில்லையே, என்ன செய்வேன்.

தே. வ-ம்:-ஐயா! உனக்குப் பணந்தானே வேண்டும். யாங்கள் எவ்விதமாயினும் தருகிறோம். நீர் என் தந்தையின் காங்களில் மாட்டிய கிட்டியைக் கழட்டிவிடுங்கள்.

நக்ஷ. வ-ம்: அடே பயலே! என்ன தெரிவித்தாய்?

தரகன் விருத்தம் (மோகனம்)

மேஷத்தின் வயிற்றில்குட்டி வலிபுலி யானாற்போல
ரோஷத்தைக் காட்டவந்த ருணபாவி பயலேவாடா
காசதைத் தருவேனென்ற கருத்தினைப் பார்ப்பேன்தந்தை
வேஷத்தைப் போலுனக்கும் விரும்பியே சாதிப்பேனே.

நக்ஷ. வ-ம்:-அடே பயலே! ஆட்டின் வயிற்றில் புலி பிறந்ததுபோல வார்த்தையாடுகின்றாய். பேஷ்! இதோ பார்; இந்த கிட்டியை உன் கையில் கட்டிவிடுகிறேன்.

[தேவதாசனின் காத்தில் கிட்டியை மாட்டுகிறான்]

தேவ. வ-ம்:-ஆ அம்மா! அம்மா விரல்கள் வலிக்கின்றதே.

சந். வ-ம்:-ஐயா தாகரே! சிறு குழந்தையின் கையிலணிந்த கிட்டியைக் கழற்றுங்கள். இன்றையதினமே உனது ரொக்கத்தைக் கொடுத்தனுப்புகிறோம்.

நக்ஷ. வ-ம்:-சரி! இதோ கழற்றுகிறேன், சீக்கிரமாக காரியம் நடக்கட்டும்.

[சந்திரமதியின் சொற்படியே அரிச்சந்திரன் சந்திரமதியை விலைகூறி வருகிறான்]

அரிச்சந்திரன் தரு

(இராகம்-நீலாம்புரி, தாளம்-ஆதி)

வினையால் மனைவியையும் விஸ்வாமித்ரான் கடன்தீர
விற்கின்றேன்நான் கனவான்களே வேண்டில் வருவீரே (வி)

துணையாளவளெனக்குப் பொய்யைச் சொல்லாதவள்
இணையாய்வந்தே இவளைக்கொள்ள இங்கேயோடிவாரீர் (வி)

எஜமான்மொழி கடவாதவ விரக்கமுள்ள மனத்தாள்
நிஜம்போன்றவள்கொலைவிட்டவள் நோய்க்கொள்ளவாரீர் (வி)

[அரிச்சந்திரன் விலைகூறிப் போகிறான் காலகண்டையர் வருகிறார்]

காலகண்டன் வ-ம்:-அடே! யாரப்பா நீ, எதற்காக இவளை விலை கூறுகிறாய்?

அரி. வ-ம்:-சுவாமி! புவிக்கெல்லாம் புகழ்பெற்ற பூமியாகிய அயோத்தியை அரசாண்டுவந்த அரிச்சந்திரன் என்பவன் யான்தான். நான் கௌசிகருக்குக் கொடுக்கவேண்டிய கடனுக்காக இம்மாதை விற்கின்றேன்.

கா. வ-ம்: அட பைத்தியக்காரா! இதற்காகவா மனைவியை விற்கிறாய், என் கடனைக் கொடுக்கமாட்டேனென்று சொல்லுகிறதுதானே, அந்த சன்யாசியை அடித்து தூரத்துகிறதுதானே.

அரி. வ-ம்:-சுவாமி! முன்னால் கொடுப்பேனென்று சொல்லிவிட்டு இப்போது இல்லையென்றால், அது சுத்தப் பொய்யல்லவா? அதினும் அடித்தனுப்புவது பஞ்சமாபாதகத்தில் ஒன்றல்லவா?

கா. வ-ம்:-அடா எப்பா! ஒரு பொய் சொன்னால் என்ன முழுகிப் போச்சுது, அப்படிக்கெல்லாம் பார்த்தால் இவ்வுலகில் உயிர் வாழவே முடியாது. ஜாக்கிரதை, இனியாவது என் சொல்லைக் கேட்டு பிழைத்துப்போ.

அரி. வ-ம்:-சுவாமி! அவ்விதம் யான் புகல்வோனல்ல. ஆயினும் உமக்கு ஊழியம் செய்ய ஆள் தேவையிருந்தால் இவளை வாங்கிக்கொண்டு பணத்தைத்தாரும் ஐயரே.

கால. வ-ம்: சரிதான், என்னையே வாங்கிக்கொள்ளும்படி தெரிவித்து விட்டாயே? (சற்று யோசித்து) ஆம், இப்பெண்ணுக்காக எவ்வளவு பொன் கொடுக்கவேண்டும்.

அரி. வ-ம்:-ஐயா! ஓர் வாலிபன் ஓர் மதத்த யானைமீதேறி கவ்ணெறிந்தால் அது எவ்வளவுதூரம் போகுமோ அவ்வளவு பொன் கொடுக்கவேண்டும்.

காம். வ-ம்:-ஐயையோ! கொஞ்சமாகத்தான் கேட்கின்றான், நேக்கு ஆளும்வேண்டாம் இழவும்வேண்டாம் வேறெங்காகிலும் போய்ப்பார்.

அரி. வ-ம்:-சுவாமி! தனத்திலுயர்ந்த தாங்களே இவ்விதம் இவ்வடி யேன்மீது கருணைவையாமல் பேசினால் இவ்வடியேன் போகும் கதி என்ன? சற்று கிருபை பாலிக்கவேண்டும் ஐயனே.

[காலகண்டையரை அரிச்சந்திரன் பணிகிறான்]

கால. வ-ம்:-போகட்டும் பாவம், அதிகமாக வருந்துகிறான். அப்பா! அஞ்சாதே கொடுக்கிறேன், ஐயா தாகரே! நாளைய உதயத் திற்குவந்து உமக்குச் சேரவேண்டிய பொன்னை பெற்றுக் கொள்.

தா. வ-ம்:-நல்லதையா, உம்மிடமேவந்து வாங்கிக்கொள்ளுகிறேன்.

கால. வ-ம்:-அம்மா! வா போகலாம். அடே பயலே வா.

அரி. வ-ம்:-ஐயோ! என்ன செய்வேன், கௌசிகரின் கடனுக்காக மனைவியை விற்றேனல்லாமல் மைந்தனையுமா விற்றேன்?

கால. வ-ம்:-பேஷ்! பேஷ்! நன்றாயிருக்கிறதே.

காலகண்டன் விருத்தம்

(பிம்ப்ளாஸ்)

விருக்ஷத்தை விற்றுவிட்டு இளைபிஞ்சு காய்வேறென்று
பரித்துச்செல் வானைப்போலப் பிடிவாதம் செய்திடாதே
கருத்துடன் தாயும்பிள்ளை கலங்காம லெந்தன்பின்னே
தருணமே அனுப்பாவிட்டால் தந்திடேன் பொன்னைத்தானே.

கால. வ-ம்:-நீர்சொல்வது நூதனமாயிருக்கிறது. ஒருவன் மரத்தை விலைக்கு வாங்கினால் அதன் பிஞ்சுவேறு காய்வேறு இலைவேறு என்பதைப்போலத் தெரிவிக்கின்றாயே. அப்படி உனக்கிஷ்ட மில்லாமற்போனால் என்கிரயத்தைக் கொட்டடா கொட்டு.

சத். வ-ம்:-அரசே! தாயுடன் பிள்ளைபோனால் எனது தாய் நம்மைப் பிரிந்ததுபற்றி துக்கிக்காது இருப்பார். ஆதலால் தடை யின்றி பாலனை இவ்வந்தணர்பின் அனுப்புங்கள்.

அரி. வ-ம்:-மந்திரி! அப்படியே நல்லதப்பா. சுவாமி! உமது இஷ் டப்படியே தாயையும் பிள்ளையையும் அழைத்துச் செல்வீர்.

கா. வ-ம்:-அடே வாடா பயலே! அம்மா! சீக்கிரமாகவா. என் ஆம் பிடையாள் கோபிப்பாள். நேக்கு நேரமாகிறது.

தேவ. வ-ம்:-தந்தையே! இதோடு உம்மை எப்போது காணப் போகிறேன்.

சந். வ-ம்:-ஐயோ பிராணபதி!

(இராகம்-ஆகிரி, தாளம்-சாப்பு)

எப்படி பிரிவேன் என்சுவாமி யுனே
இப்படியும் பாவி எழுதியிருந்தானே நான்
கைப்பிடி கணவரின் கழலடியைவிட்டு நான் எப்
வேந்தர் மனைவிகளும் வேண்டித்தொழில்செய்வாரே
விந்தையென்றன் வாழ்வை விரும்பித் தவஞ்செய்வாரே
சாந்தமே யுருவான சத்தியரே வேறுனீரோ
தையலா ளெனைவிட்டுத் தான் ஒண்டியாய்ப்போனீரோ எப்

சந். வ-ம்:-நாதா! போகட்டுமா?

அரி. வ-ம்:-கண்மணி! அப்படியே சென்றுவா?

[சந்திரமதி திரும்பவும் வந்து]

(ஐயோ மகனேநீ அலறித் துடித்திட என்ற மெட்டு)

சந்திரமதி தரு

இன்னு மொருதரம் மன்னு உன்முகத்தை
கண்ணாரப்பார்த்துப் போறேன் இனிவாறேன் கனிதேரேன்
ஏந்தலே மறவா வேந்தலே வேந்தலே வேந்தலே

அரிச்சந்திரன் தரு

வாக்கு நிலைக்கவும் யோக்கிய னுக்கவும்
பாக்கியம் நீயளித்தாய் வரந்தரித்தாய் கரங்குவித்தாய்
வாழிநீ பிராண தோழிநீ தோழிநீ தோழிநீ

சந்திரமதி தரு

நத்தியென் காத்தைப் பற்றிய கைக்கொரு
முத்தமிட்டுப் போவேன் நாடித்தாவேன் கூடிவாறேன்
நாதனே பொற் பாதனே பாதனே பாதனே

அரிச்சந்திரன் தரு

சின்ன குமாரனை உன்னிச் சுகமாக
அன்பே நீகோர்ப்பாய் சீர்சுறப்பாய் பேர்சிறப்பாய்
செல்லுவாய் சுபம் சொல்வாய் சொல்வாய் சொல்வாய்

சந்திரமதி தரு

ஆதுலர் மாதவர் ஓதுவோ ரேற்றிடும்
பாதமதைப் பணிந்தேன் அடிபணிந்தேன் முடிகுனிந்தேன்
அண்ணலே சுபம் அண்ணலே அண்ணலே அண்ணலே

[இதற்குள் காலகண்டன் சந்திரமதியைத் தள்ளிச் செல்கிறுன்]

அரி. வ-ம்:-ஐயா தரகரே! முனிவருக்குச் சேரவேண்டிய பொன்னை பெற்றுக்கொண்டீரல்லவா?

தர. வ-ம்:-அரசே! முனிவரின் கடனைமாத்திரம் கொடுத்துவிட்டாயே, நான் இத்தனை நாட்களாக உன்னோடு கஷ்டப்பட்டு வந்தேனே, எனக்கு தரகுகூலி இல்லையா?

3

அரி. வ-ம்:-ஐயா! தங்களுக்கு என்ன வேண்டும்?

தர. வ-ம்:-எவ்வளவு கொடுத்துவிடப் போகிறுய்? நான் அப்படி ஒன்றும் உன்னை அதிகமாகக் கேழ்க்கமாட்டேன், பதினுயிரம் பொன் கொடுத்தால் போதும்.

அரி. வ-ம்:-அப்படியே தருகிறேனேயா.

சத். வ-ம்:-அரசே! என்னை விற்று இவரின் கூலியைக் கொடுத்தனுப்புங்கள்.

அரி. வ-ம்:-மந்திரி! அது நீதியல்ல, நீ என்னைவிற்று இவரின் கூலியைக் கொடு.

சத். வ-ம்:-ஆ விதியே! அப்படியே நல்லதரசே.

[எல்லோரும் போகிறுர்கள்]

சீன்-8.] [இடம்-காசிநகரில் ஓர்வீதி

நடிகர்:-தோட்டி, தோட்டிச்சி, அரிச்சந்திரன், சத்யகீர்த்தி.

[தோட்டி வருகிறுன்]

தோட்டி தரு

(சும்மா சும்மா கமால் பண்ணுதே என்ற மெட்டு)

ஆண்டமாரே தோட்டியானுங்கோ காசிநகரில்
அடுமைவேலே செய்வேன்பாருங்கோ (ஆ)
நீண்டகோலே கையில்கொண்டு நெடிய பிணங்களேச்சுடுவேன்
தாண்டவம் புரிந்த ஈசன் தன்னேயே துதித்திடுவேன் ஆ
மகாராஜன் புண்யவாங்க மனேவிமக்க நல்லாக்கிணும்
சுகமாக அவங்களேநான் சுட்டுகூலி வாங்கவேணும் ஆ
காஷ்டத்தை அடுக்கிடுவேன் கட்டைமுட்டை வைத்திடுவேன்
சூக்ஷமாகவே தகித்து சாம்பலாகச் செய்திடுவேன் ஆ
நியாயப்படி வாய்க்கரிசி நாட்டினிலே வாங்கிடுவேன்
தியாகராஜன் சொற்படியே தெம்மாங்குபாடி யாடிடுவேன் ஆ

தோ. வ-ம்:-த்ரா யப்பா! டோஆண்டே! நானு எப்பனு ஒருதடவை இந்தப்பக்கம் வாரது வயக்கம், இண்ணிக்கி என்னமோ இப்பிடீ வந்துவிட்டேன். எஞ்சாமி! உங்க கொயந்தை குஞ்சியெல்லாம் சேமந்தானு சாமி? அது இருக்கட்டும்.

தோட்டி பாட்டு

(ஐயா சிறுபெண் ஏழையென்பால் என்ற மெட்டு)

ஜாதிஜாதி என்றுபலர் ஓதிவைச்சாங்கோ-அந்த
நீதியில்லா நூல்களெல்லாம் நெருப்பில்போடுங்கோ ஜாதி
பேத மேதுங்கோ ஜாதி
ஆதியாரு ஆனேமுகன் அவர்கள் பாருங்கோ
ஆறுமுகன் ஆதிசிவன் யாரு பாருங்கோ அதை
அறிந்து கூறுங்கோ நூலே எடுத்துப் பாருங்கோ ஜா

பரமனிடபக்தன் நந்தன் பறையன்தானுங்கோ
பகவதியன்று பறைச்சியுடலிற் பாதியானுங்கோ
திறமுடைய மதுரைவீரன் வளர்ந்த தெங்கொங்கோ-பல
திருட்டுப்புராண குருட்டுயுக்தியை நம்பவேண்டாங்கோ-மன
சந்தேக மேங்கோ-கீழ் (ஜா)

மாட்டிறைச்சியின்பெருங்காயத்தே புசிப்பதேனுங்கோ
மாட்டினிட உதிரமல்லோ பாலுதானுங்கோ
மேட்டிமையாய் கனவான்களதை சாப்பிடுராங்கோ-இந்த
மார்க்கமெல்லாம் கேட்ட என்னை பறையனென்றுங்கோ-தூர
போடா என்றுங்கோ (ஜா)

கழுதையின்வயிற்றினிலே காங்கேயர் பிறந்தார்
கண்ணப்பனின் எச்சலுண்டு கங்காளன் சிறந்தார்
பழுதில்லாநாரதர் வண்ணான்வீட்டினில் பிறந்தார்-இதை
பகர்ந்த தியாகராஜன் மொழியை பலபேர்கள் மறந்தார்-ஜாதி
மதங்களைத் துறந்தார் (ஜா)

தோட்டி. வ-ம்:-போகட்டும் எப்பா! இன்னும் நானு கடைக்குப் போகனும் கள்ளுதண்ணி சாப்பிடனும் அங்கேயிருந்து வீட்டுக்குப்போயி என் வேலேகளை பாக்கணும், நானும் காத்தாலேயிருந்து என் பெண்டாட்டியே தேடிக்கொண்டிருக்கிறேன். இன்னேரவரைக்கும்எங்கேயிருக்கிருளோதெரியவில்லை; ஆனல் இங்கிருக்கும் கனவான்களைக் கொஞ்சம் கேட்டுப்பார்க்கலாம்.

(அலங்கார டப்பான் என்ற மெட்டு)

கன்னங் கறுத்தகுட்டி கக்கத்திலே கூடைக்காரி
கம்பிசேலை கட்டிக்கொண்டு கடைத்தெருவேபோகையிலே
கண்டிருந்தா சொல்லக்கூடாதா எங்கப்பமாரே
கவலையை விலக்கப்படாதா (க)

சிங்கார பேச்சுக்காரி ஜில்ஜில்லென நடக்கும்தீரி
சங்கீத பாட்டுக்காரி சமுக்குகுமுக்கு ஜோக்குக்காரி
சால்பண்ணும் வேலைக்காரிதான் என்பெண்டாளாட்டி
புடையான்டக்கர் தினுசுக்காரிதான் (க)

ஜோக்கு நடையழகி ஜோலார்பேட்டை சேலைக்காரி
காக்காதோப்பு மூலையிலே கண்காட்டி போகையிலே
வி. எ. தியாகராஜன் கீதமே உலகமெங்கும்
உண்மையாய் ஜொலிக்கும் நாதமே (க)

[தோட்டி பாடிக்கொண்டிருக்கிறன், தோட்டிச்சி வருகிறள்]

தோட்டிச்சி தரு

(மானு மதுரையிலே என்ற மெட்டு)

ஆசையுள்ள என்ராஜா அழகுமிகும் என்துரையே-உன்
நேசத்தால் காடுயெல்லாம் நான்தேடி வாடினேனே (ஆ)

கஞ்சி குடுவைகொண்டு கருவாட்டு மண்டைசுட்டு-நான்
இஞ்சிதுவையலுடன் இளங்கொடியாள் கொண்டுவந்தேன் (ஆ)
நாடெல்லாம் தேடியுன்னை கண்களலையுதோடா-செத்த
மாடறுக்கும் காவலனே மங்கையுன்னைக் காணேனடா (ஆ)

தோ. வ-ம்:-டீயோ கறுத்தகுட்டி! நீ இந்நேரமா பூட்டையாங் காட்டியும், நான் உன்னை என்னேரமா வயிபார்த்திருந்தேன் தெரியுமா?

தோட்டிச்சி. வ-ம்:-போடா! போடா! எங்கயிதே.

(நாதந்தி நாதந்தி என்றமெட்டில் பின் அடுக்கு)

கையாலே ஆகாத காமாட்டி நீயொரு
பைசா குடுத்த துண்டா நல்லபுடவை
நைசா எடுத்த துண்டா

வசனம்போல்

போட வெற்றிலையுண்டா நத்துமூக்குத்தியுண்டா
வெத்து ராக்களியுண்டா முத்து கொப்புதானுண்டா ஒரு
லவுக்கை போட் டாயா புலாக்கு
கம்மல் போட் டாயா நல்ல
சோத்தை போட் டாயா ரொக்கம்
சேத்து வைத் தாயா அட
சிச்சிச்சி போப்போப்போ நீயும் ஒரு மனுஷனு

(பாட்டு)

அக்கம்பக்கத்தோர்கள் கக்கலிக்கொட்டியே
மிக்கநகைக்கின் றுரே உனக்கு நான்
தக்கதல்ல என் றுரே

(வசனம்போல்)

கொஞ்சம்பூந்திகொடுத்தாயா அல்வாஜிலேபிகொடுத்தாயா
கண்டு முருக்கு கொடுத்தாயா கடலை அவலு கொடுத்தாயா-ஒரு
கோவிலுக்குப் போனயா அல்லது
குளத்துக்கு போனயா இந்த
கூருகெட்ட மடையனுக்கு கொடுத்தேனே கழுத்தே-இந்த
ஏருவிழும் ஈனன்வாழ்வு எனக்கு எதற்கு அடே (கை)

தோ. வ-ம்:-டீயோ குட்டி! அதிருக்கட்டும்.

தோட்டி தரு

(அலங்கார டப்பான் என்ற மெட்டு)

நேருநெத்தி பச்சைக்காரி நேர்த்தியுள்ள சேலைக்காரி
நீலசாந்து பொட்டுக்காரி நாகரீக ஜோக்குக்காரி
டீ டீ சின்ன குட்டி பார்த்துவாடி என்னைக் கட்டி

மூக்குத்தி புலாக்குகாரி மேலுகண்ணு பார்வைக்காரி
பாக்கனைப்போல் நானிருக்க போக்குகாட்டிகொள்ள போனையா
உங்கொயித்தா கயித்திலே
குடுக்கபோறேன் வயித்திலே
மல்லிகைப்பூ வாங்கிக்கோ மரிக்கொழுந்து சூட்டிக்கோ
மெள்ளவந்து தாங்கிக்கோ மிளகாவாங்கி மாட்டிக்கோ
புளிச்சகள்ளை குடிச்சிபாரடி வி. எ. தியாகராஜன்
பதத்தைக்கேட்டு பதிலும்கூறடி

[பாடி நடித்துக்கொண்டே இருவரும் உள்ளேபோகிறார்கள், சத்தியகீர்த்தி அரிச்சந்திரனை விலைகூறிக்கொண்டே வருகிறான்]

சத்தியகீர்த்தி தரு

(பச்சைமா மலைபோல்மேனி என்ற மெட்டு)

முன்செய்த வினையால் தானே முனிவருக்காக நானே
என்னரசன் தன்னையானே இதமுடனே விற்கின்றேனே (மு)
சத்தியம் தனக்கைக்கொண்டு தரகரின்கூலிக்காய் இன்று
உத்தமரே விற்கக் கண்டு உடனேநீர் வாங்குவீர் நன்று (மு)

தோ. வ-ம்:-சாமி! கும்புட்ரேன், ஆர்யா! நீ மனுசனை விக்கிறவன்?

அரி. வ-ம்:-ஐயா! அயோத்திநகரை யாண்டுவந்த அரிச்சந்திரனென்பார் என் பெயர்; இந்தத் தரகருக்கு யான் பொன் பாக்கியாக இருக்கிறேன், அதற்காக என் மந்திரி என்னை விலை கூறினார் தாங்கள் யார்?

தோ. வ-ம்:-ஆண்டே! நானு இந்த ஊரிலே பொணஞ்சுட்ர தோட்டி, எனக்குக்கூட ஒரு ஆளு தேவைதான், ஏன் ஆண்டே நீ எங்க ஜாதியிலே அடுமை பட்றையா?

அரி. வ-ம்:-ஐயா! தங்களிஷ்டம்போலவே தங்களுக்கு அடுமைப் படுகிறேன், பொன்னை அவரிடம் கொடுத்தனுப்புங்கள்.

தோ. வ-ம்:-எவ்வளவு பொன் ஆண்டே?

அரி. வ-ம்:-பதினாயிரம் பொன்.

தோ. வ-ம்:-அப்பா! அவ்வளவு பொன்னு? சரி நான் குடுத்துடுறேன் (பொன்னைக்கொடுத்து) போரிங்களா. ஓ அடுமையில்லாத ஆண்டே! நீயும் அவர் கூடவேபோ. அடே எம்மவனே! வா சீக்கிரம், உம் போரண்ணு சொன்னே?

அரி. வ-ம்:-என் பெயர் அரிச்சந்திரன்.

தோ. வ-ம்:-அதுயென்ன யெயவோ, என் வாயிலே அது நொய்யிலே, நானு உன்னை அடே அணிச்சா எண்ணு கூப்பிடுவேன், நீ எஞ்சாமி இண்ணணும் தெரியுமா? வா போலாம் அதோ அந்த மாமிசக் காவடியைத் தூக்கிக்கோ தோள்மேலே.

[அரிச்சந்திரன் காவடி தூக்கிக்கொண்டு வீரவாகுடன் போகிறான்]

சீன்-9] [இடம்-காலகண்டன் வீடு

நடிகர்:-சந்திரமதி, காலகண்டன், தேவதாசன், அசலாத்துப்பிள்ளைகள்

[காலகண்டன் அமர்ந்திருக்கிறான், அசலாத்து மைந்தர்கள் வருகின்றனர்]

கால. வ-ம்:- அடே, முரட்டு தேவடையாள் பிள்ளைகளே! எங்கே யடா போகிறீர்கள்?

அச. வ-ம்:-ஐயரே! யாங்கள் காட்டிற்குச் சென்று தர்ப்பை முதலானதுகளை கொண்டுவரப் போகிறோம்.

கால. வ-ம்:-அப்படியானால் அடே பயல்களே! நமது கிச்சாணையும் உங்களுடன் கூட அழைத்துச் செல்லுங்களடா.

அரி. வ-ம்:-சீக்கிரம் அனுப்பும் ஐயரே!

கால. வ-ம்:-அடி சந்தி!

சந். வ-ம்::ஏன் சுவாமி! [சந்திரமதி வருகிறாள்]

கால. வ-ம்:-அடி! என்ன இது? எப்போது பார்த்தாலும் உனது அழுகுரலே பெரிதாய்விட்டதே. இதென்ன வீடா, அல்லது சுடுகாடா? போகட்டும். அசலாத்து மைந்தர்கள் தர்ப்பை பறிக்க காட்டிற்குச் செல்கிறார்கள், நமது கிச்சாணையும் கூட அனுப்படி போய்வரட்டும்.

சந். வ-ம்:-என்ன சுவாமி! எனது பாலகனையா? ஐயோ!

சந்திரமதி விருத்தம் (முகாரி]

மழலைச்சொல் மாறவில்லை என்மகன்பல்லோ விழவேயில்லை
தழைமுள்ளும் புலியும்யானை தனிபாம்பு மலிந்தகாட்டில்
குழந்தையை அனுப்புதற்கென் குடலது கலங்குதையோ
பழைமறை யோரேயென்னை பரிவுட னனுப்புவீரே.

சந். வ-ம்:-ஐயா! எனை அடிமைகொண்ட வேதியரே! என் மகனோ சின்னஞ்சிறுவனாதலால் யான் சென்று பறித்து வருகிறேன் சுவாமி!

கால. வ-ம்:-பேஷ்! பேஷ்! வெகு பசப்புமொழிகளைப் பேசுகிறாயே, சட் உன்மகனைக் காட்டிற்கு அனுப்பினால் அனுப்பு, இல்லையேல் என் ரொக்கத்தைக் கொட்டடி கொட்டு.

சந். வ-ம்:-சுவாமி கோபியாதீர், தங்களின் மனோக்கத்தின்படியே என் மகனைக் காட்டிற்கு அனுப்புகிறேன். ஆயினும் என்மகன் தைரியப்பட கொஞ்சதூரம் சென்று அவனுக்குச் சில புத்தி மதிகளைச் சொல்லி வருகிறேன் ஐயரே!

கால. வ-ம்.-அடி! ஆத்திலே வேலை அதிகமாக யிருக்கு. ஆம்பிடையாள் கோபிப்பாள், நீ சென்று சீக்கிரமாக வா.

சீன்-10] [இடம்-ரோட்

நடிகர்:-சந்திரமதி, அசலாத்துமைந்தர், தேவதாசன்

சந்திரமதி கண்ணி

(இராகம்-சாமா, தாளம்-ரூபகம்)

என்ன செய்வேனடா என்மகனே இதற்
கேதுசெய்வேனடா கண்மணியே
துன்பம் விளையுமோ இச்சகுனத்தினுல்
சோருதென்னுவி யடாமகனே என்

தேவதாசன் கண்ணி

(இராகம்-இந்துஸ்தான், காபி-ஏகதாளம்)

துன்ப மணுகாதம்மா தூயன் திருவடியை
அன்பாக நான்துதித்தேன் என்னம்மணி
ஆ என்னம்மணி ஓ என்னம்மணி
அறுத்தே சமித்து வாறேன் துன்

சந்திரமதி கண்ணியின் தொடர்பு

அருந்தவம் செய்தேண்டா என்மகனே இந்த
அவதிக்குள் ளானேண்டா கண்மணியே
கரும விதிதானே உன்னைத் தனிவிட
காலமும் வந்ததடா மகனே அரு

தேவதாசன் கண்ணியின் தொடர்பு

தனியாய் விடுத்தேனென்று தளராதே யுன்மனதில்
இனிவான வைந்தெழுத்தை என்னம்மணி
ஆ என்னம்மணி ஓ என்னம்மணி
எடுத்தோதிப் போய்வருவேன் தனி

சந்திரமதி கண்ணியின் தொடர்பு

பெற்ற நாள்முதலாய் என்மகனே யுன்னைப்
பிரிந்தறியேனடா கண்மணியே
உற்ற சகுனத்தால் ஏது விளையுமோ
ஒன்று மறியேனடா மகனே பெ

தேவதாசன் கண்ணிகள் தொடர்பு

வந்த வினைவிலக்க வளர்விசுவேசனுண்டு
தந்தை யடிகளென்னை என்னம்மணி
ஆ என்னம்மணி ஓ என்னம்மணி
தான் காக்கும் போய்வருவேன்

தே. வ-ம்:-அம்மணி! இந்த சகுனத்திற்காக வருந்துவதில் யாது பயன்? வருவது வழியில் தங்குமா? நீ யாதொன்றுக்கும் அஞ்சாது இவர்களுடன் எனை அனுப்புவாய் தாயே.

சந். வ-ம்:-கண்மணி!

சந்திரமதி கண்ணி

(இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ரூபகம்)

பாலா என்னகாலம் வந்ததோடா மகனே ஆ சுதனே
பற்றுதே என்வயிறு நற்றுதே துயரம்
சுற்றுதே வுடலும் பெற்ற பலனிதே பா

தேவதாசன்

தாயே வீணாய்த் தயங்கியே அழுகாதே ஆ அன்னையே
தங்கநிற மேனி எங்கும் நீர் சொரிய
அங்கம் பதராதே மங்களமாய் வாறேன் (தா)

சந்திரமதி

கண்ணே எப்போ காண்பேனடா கட்டிக்கனியே ஆ மணியே
கலங்குதே நெஞ்சமும் விலங்குள காட்டிலே
துலங்கநீ சென்றுமே நலமாய் வருவாயோ (க)

தேவதாசன்

அம்மா மெத்த அலறியே துடிக்காதே ஆ அன்னையே
அண்டினோரை யாளும் ஐண்டிகை யாளனும்
உண்டிதோ தர்ப்பையைக் கொண்டோடி யான்வாறேன் (அ)

சந். வ-ம்:-அப்பா! தேவதாசா! சீக்கிரமாகச் சென்று வருவாயடா கண்மணி!

தேவ. வ-ம்:-அப்படியே வந்து சேருகிறேன் தாயே.

[எல்லோரும் போகிறார்கள்]

சீன்-11] [இடம்-காடு

நடிகர்:-அசலாத்து மைந்தர், தேவதாசன்.

அச. வ-ம்:-அடே சீக்கிரம் வாங்களடா, தர்ப்பை பறிக்கலாம். அப்பா தேவதாசா! நீ ஒருபுறமாகக் குந்தியிரு, நாங்கள் தர்ப்பை பறித்துவந்து, ஆளுக்குக் கொஞ்சம் கொடுக்கின்றோம்.

தேவ. வ-ம்:-அப்பா தோழர்களே! சூரியவம்சத்தி லுதித்து வீரியத்தைப் போக்கலாகுமா? அது நீதியன்று ஆயினும் யானே சென்று பறித்துக்கொள்ளுகிறேன்.

[எல்லோரும் தர்ப்பை பறிக்கச் செல்லுகிறார்கள்]

தேவதாசன் கண்ணி

(இராகம்-அபுரூபம், தாளம்-ஏகம்)

தில்லாம்திரி தில்லாம்திரி தில்லாம்திரி தில்லாம்திரி
தில்லாம்திரி தில்லாம்திரி தில்லாம்திரி தில்லாம்திரி (தி)
எல்லாம் முனி சூதோ சாசி ஈசா உந்தனருளோ
இக்காட்டினில் தர்ப்பை கொய்ய விட்டாய்விதி செயலோ (தி)
பார்க்கப்பய மாகுதுளம் பதறுதடி தாயே
பற்றிக்கையால் தர்ப்பை கொய்வேன் பரமே யருள்வாயே (தி)

N54

பாவிகனி வில்லானெனை பாலனென்று மறிந்தே
பற்றசொன்னான்தர்ப்பையிதோ பறிக்கின்றேனேதெரிந்தே தி

தேவதாசன் விருத்தம் (தேசிக்முகாரி)

என்னமோ ஈசாபுற்றி லிறைச்சலும் சீரல்சத்தம்
என்னமோ இடுகுதையோ வேதுண்டோ வறியேனுள்ளே
என்னமோ காலங்காணேன் யெந்தையே பெற்றதாயே
என்னையித் துயருந்த எழுதினான் பாவியன்றோ.

தே. வ-ம்:-ஆ ஈசா! விதியை வெல்லப்போகா. ஆயினும் தர்ப்பை பறிக்கிறேன் (பாம்பு கடிக்கிறது ஓடி கீழே விழுந்து) ஆ! அன்னையே! நான் உன் வார்த்தையை மீறி இங்கு வந்தேன். ஐயோ! அப் பாழும் பாம்பு என் கையில் கடித்துவிட்டதே.

தேவதாசன் கண்ணி

(இராகம்-சாமா, தாளம்-ரூபகம்)

கால் சோருது கை சோருது கண்களிருளுதம்மா
பால் குடித்த நாவும் பல்லும் பற்றிக் கிட்டு தம்மா கா
மறையோன் கையிலுன்னை விட்டு மடியலானே னம்மா
நுரைதள்ளுதேநெஞ்சின்கோழை நோக்குதுமேலம்மா கா
பெற்றவயி றெரிய விட்டேன் பிள்ளையென்னு மாசை
அற்றிடவுங் கதியுனக்கே அமைந்ததுவோ ஓசை கா
தந்தை போன வழியுங்காணேன் தனயனையும் துறக்க
இந்தவிதி யெனக்கோ பாவி எழுதினானே இறக்க கா

[இதற்குள் அசலாத்து மைந்தர்கள் வருகிறார்கள்]

அச. வ-ம்:-நேரமாகிறது வாங்களடா போகலாம் தேவதாசா வாடா போகலாம். எங்கடா காணோம்? (திரும்பிப் பார்த்து) அதோ விழுந்திருக்கிறாண்டா? என்னடா சங்கதி தேவதாசா?

தே. வ-ம்:-அப்பா தோழர்களே! நான் தர்ப்பை கொய்யும் சமயம் அங்கிருந்த பாம்பு ஒன்று சீறி கரத்தில் கடித்துவிட்டது. நீங்கள் நாடுசென்று எனது தாய்க்குச்சொல்லி அனுப்புங்களப்பா ஹா தந்தையே! ஆ அன்னையே! ஈசா! நீயே கதி.

[உயிர்விடுகிறான்; அசலாத்து மைந்தர்கள் போகிறார்கள்]

சீன்-12] [இடம்-காலகண்டன் வீடு

நடிகர்:-காலகண்டன், காலகண்டி, சந்திரமதி, அசலாத்துப்பிள்ளைகள்

சந்திரமதி விருத்தம் (முகாரி)

காட்டுக்குப்போனயென் மகன் கண்மணியக்தியாயும்-அவன்
வீட்டுக்கு வரவுங்காணேன் வேகுதென் கும்பியையோ
நாட்டுள மைந்தர்விட்டு-அவர்
நடந்துமுன்-வந்திட்டாரோ-அதை நான்போய்
கேட்டுமே வருவோமென்றால் கிட்டிட விடமுங்காணேன்.

102641 EGMORE, MADRAS
O-,892MTC,5 N54

சந். வ-ம்:-ஹா! காசிவிஸ்வேசா! என்மகன் இன்னேரமாகியும் வீட்டிற்கு வரக்காணேன்.

சந்திரமதி தரு
(இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ரூபகம்)

என்ன செய்வேன் இன்னமும் வரக்காணேன் ஆஆ என் மகன்
எந்தன் வயிற்றினில் ஈசனருளினால்
நன்மையாய்த் தோன்றிய நாயக மாமணி என்

அந்திப்பொழுதும் வந்திடலாச்சி ஆ ஆ மகனே
அன்னம் கேட்டிடும் நேரமும் போச்சே
எந்தன் மனமெத்த ஏங்கி துடிக்குதே
எண்ணுதெல்லா மெண்ணி என் னுளம் வாடுதே என்

சந். வ-ம்:-ஆ! பரமேசா! அந்திப்பொழுதும் வந்துவிட்டதே. எதிரில் சென்று அழைத்துவரலாமென்றாலும் இடமும் தெரியேனே. அதோ யாரோ வருகிறார்கள்.

[அசலாத்து மைந்தர்கள் வருகிறார்கள்]

சந். வ-ம்:-அப்பா! அசலாத்து மைந்தர்களே!

சந்திரமதி விருத்தம் (முகாரி)

தாவியேமான் தன்கூட்டம் தனைக்கண்டுதொடர்வதைப்போல்
ஏவிடவுங்கள்பின்னே இணைத்தயென்மகன் தானெங்கே
ஓவிதியேதோகாணேன் உரைத்திடீரெனக்குத்தோன்ற - இப்
பாவியென்வயிறுமெத்தப் பதறியேபதைக்குதப்பா.

சந். வ-ம்:-அப்பா! உங்களுடன் அனுப்பிய என்மகன் எங்கே?

சீனன் வ-ம்:-அடே குப்பா! என்னடா சொல்லுவது? அம்மா! நீங்கள் எங்களுடன் உனது மகனை அனுப்பினீர்களல்லவோ? பிறகு நாங்கள் எல்லோரும் ஒன்றுசேர்ந்து காட்டுக்குப் போனோம், போனோமா? பிறகு அவனைக் கேளுங்கள்.

குப்பன் வ-ம்:-எல்லோரும் காட்டுக்குப் போனோமா? நான் அவனுக்குச் சொன்னேன், தேவதாசா! நீ சிறுபிள்ளை, நீ தர்ப்பை பறிக்கவேண்டாம், நாங்கள் பறிப்பதில் உனக்குக் கொஞ்சம் கொடுக்கிறோம், அதைக் கொண்டுபோய் அய்யரிடம் கொடு என்று சொன்னேன். அதற்கு அவன் சூரியகுலத்திலுதித்து வீரியத்தை இழக்கலாகாது, யானே சென்று தர்ப்பை பறித்துக்கொள்ளுகிறேன் என்று சொன்னான். சொன்னானா? பிறகு அதோ அவனைக் கேளுங்கள்.

சுப்பன் வ-ம்:-சொன்னோமா? சொன்னதை அவன் கேட்காமல் போய் தர்ப்பை பறிச்சான், அங்கு ஒரு பாம்பு புக்து இருந்தது, அப்பாலே அவன் கீழே விழுந்துவிட்டான், நாங்கள் மாத்திரம் வந்துவிட்டோம்.

சங். வ-ம்:-என்ன! என்ன! என்மகனு?

சந்திரமதி கண்ணிகள்

ஆ மகனே பாம்பு அப்பா மகனே பாம்பு
ஐயோ மகனே பாம்பு அடவியில் கடித்ததோடா
என் மகனே மகனே மகனே மகனே
அப்பா அப்பா வென்று அம்மா அம்மா வென்று
அழுது மடிந்தாயோடா நீ மகனே
என்னவென் றழுதாயோ ஏங்கிப் பறந்தாயோ
எந்தனை மனதினி லெண்ணமு மிட்டாயோடா
மகனே மகனே மகனே மகனே

சங். வ-ம்:-கண்மணி! அன்னை வாக்கைவிட ஐயர் வாக்கே மேலாகக் கருதி நீ அத்வான கானகத்திற் சென்று,

சந்திரமதி விருத்தம் (முகாரி)

மாண்டாயோமகனேபாம்பால் மறந்தாயோஉன்னன்னைதன்னை
வேண்டாயோநடுத்தெருவிலென்னை விட்டையோஒண்டியாக
ஆண்டையும்செய்துபோன அடிமையும்பொய்க்கலாச்சோ
பூண்டையோநாதன்பாதம் போனையோமகனேயப்பா.

சந்திரமதி தரு

(இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ஏகம்)

அப்பா மாண்டாயோ ஓ ஓ பாலனே
எப்போ காண்பேண்டா என் சீலனே அ
கப்பியே யுன்னை காளந்தீண்டிட
ஒப்பி வந்ததோ ஓகோ விதியே அ
கத்தித் துடித்துமே கதறி யழுதாயோ
தத்திரீயும் தரை தாங்க விழுந்தாயோ அ

சங். வ-ம்:-அடா! எனதருந்தவச் செல்வமே! காட்டுக்குச் சென்ற நீ களையுண்டு வருவாயென, அய்யரின் மனைவியார் எனக்காக வார்த்த கூழைக் கரத்தில்கொண்டு,

சந்திரமதி விருத்தம் (கமாஸ்)

கடுகிநீ வருவாயென்று என் கைதனில் கூழையேந்தி
அடவியின் வழியைப்பார்த்து அரும்பாவி நிற்கலானேன்
படபடத் திடவென்னெஞ்சம் பாலனே நாகங்கொத்தி
நீவிடத்தினுல் மாண்டாயென்று விளம்பிடக் கேட்டேனப்பா.

சங். வ-ம்:-குழந்தாய்! இத்தகைய கஷ்டதிசையில் என்னைவிட்டு நீ இவ்விதம் மடியலாகுமா? ஐயோ மகனே! நீ அங்கு இறந்து கிடக்க நான் இங்கே அழுவதில் யாதுபயன்? அசலாத்து மைந்தரைக் கேட்டாவது நீ மடிந்த இடத்திற்கு வருகிறேனடா.

[இதற்குள் அசலாத்து மைந்தர்கள் வருகின்றார்கள்]

சந். வ-ம்:-அப்பா! அசலாத்து மைந்தர்களே.

சந்திரமதி விருத்தம் (முகாரி)

ஐயரின் மக்களுங்கள் ஆதீன மெனவே சொல்லிப்
பையனை யொப்பித் திந்தப் பாவியும் திரும்பினேனே
நொய்யுற லவனை விட்டே நோக்கிநீ ரெங்கு சென்றீர்
துய்யரே நான்போய் காணச் சொல்லுவீர் வழி யெனக்கே.

அச. வ-ம்:-அம்மணி! வழியா? இதோ இந்தச் சாலைவழியே செல்லுங்கள்; வழிமுழுதும் பச்சைத் தழைகளை ஒடித்து அடையாளமாகப் போட்டுவந்திருக்கிறோம். அதுவழியே போனால் ஒரு பிரமாண்ட ஆலமரம் தோன்றும்; அதற்கருகாமையில் காரைமுள் புதரொன்று இருக்கும்; அங்ஙனமே அவன் பறித்த தர்ப்பைகளைப் போட்டுவைத்து அதனருகாமையிலேயே அவனையும் வளர்த்தி வந்திருக்கிறோம் சீக்கிரம் செல்லுங்கள்.

[அசலாத்து மைந்தர்கள் போகின்றனர், சந்திரமதி காலகண்டய்யரிடம் வருகிறாள்]

சந்திரமதி கண்ணி
(இராகம்-காம்போதி, தாளம்-ஆதி)
திரிபுடையிலும் பாடலாம்

வேண்டி தவம்புரிந்தேன் வெகுவிரத மிருந்தேன்
விரும்பி யுனக்காகவே மகனே மகனே மகனே
ஆண்டியரு ளால்கரு வாகநீ யுதித்தபின்னே
அடிவயிற் றிடம்தந்தேன் மகனே மகனே மகனே
கால காலவுணவை கடிந்து ஒளிமழுங்கி
கறுக்க முலைக்காம்புகள் மகனே மகனே மகனே
தூலம் வதங்கிப்பால் தோன்றிடக் கண்டுமே
தோஷி மனமகிழ்ந்தேன் மகனே மகனே மகனே
[போகிறாள்]

சீன்-13] [இடம்-காலகண்டன் வீடு

நடிகர்:-காலகண்டன், காலகண்டி, சந்திரமதி.

[காலகண்டன் அமர்ந்திருக்கிறான், சந்திரமதி அழுதுகொண்டு வருகிறாள்]

சந்திரமதி தரு
பல்லவி

ஐயா வேதியரே என்னை அடிமை கொண்டவரே-என்
பாலனும்பாம்பாலேமாண்டான் பாவி என்செய்வேன் ஐ

அநுபல்லவி

அம்மா அம்மா வென்று அழுது துடித்தானும்
அருமையாய் வளர்த்த எந்த னுசைப்பாலகனும் ஐ

சந்திரமதி விருத்தம் (தேசிக முகாரி)

ஐயரே அண்டினோரை ஆதரித்திடும் பொற்பாதா
நொய்யுர அசலாத்துள்ள நோக்கிய மைந்தர்பின்னே
பையவே சென்றபாலன் பாம்பினால் மாண்டானென்றார்
துய்யரே நான்போய் காணத் தோகைக்கு விடையீவீரே.

[ஷடி பாட்டுத்தொடர்)

புத்தருகில் போயடுத்து புத்திரனைக் கண்டெடுத்து
பெற்றகடன் தீர்த்துவாறேன் போக விடைதாரும் ஐ

கால. வ-ம்:-என்ன! என்ன!! தேவதாசனா? இவன் போன வேலையை விட்டு, ஏண்டி இவன் பாம்பைக் கடிச்சான்.

சந். வ-ம்:-சுவாமி! இல்லை என்மகன் பாம்புகடித்து இறந்தான்.

கால. வ-ம்:-ஐயோ, தேவதாசனா இறந்தான். அடீ சேஷி! (சேஷி வருகிறாள்) கீச்சான் இறந்து விட்டானமடி.

காலகண்டி வ-ம்:-ஐயோ! பணம் போச்சே போச்சே, (என்று இருவரும் சேர்ந்து மாரடித்துக்கொள்கிறார்கள்)

கால. வ-ம்:-அடீ சந்தி! ஏன் அழுகிறாய், பணம் போனதற்கா? என் பணம் போனால்போகிறது, நீ போய் ஆத்திலுள்ள வேலையைப் பார்.

சந். வ-ம்:-சுவாமி! இறந்த மகனை எடுத்துத் தகனம் செய்யவேண்டாமா?

கால. வ-ம்:- இல்லை இல்லை, போகக்கூடாது, ஆத்துக்குப்போய் வேலையைப்பார்.

காலகண்டி வ-ம்:-நாதா! பெற்ற வயிறல்லவா, அவளைத் தடுக்காதீர். அடியம்மா சந்தி! சீக்கிரமாகச் சென்று உன் மகனைத் தகனம் செய்துவா.

சந். வ-ம்:-அப்படியே அம்மணி! [சந்திரமதி போகிறாள்]

சீன்-14] [இடம்-மயானம்

நடிகர்:-அரிச்சந்திரன், சத்தியகீர்த்தி.

அரிச்சந்திரன் விருத்தம் (பைரவி)

பிறந்தது மண்மே லிறப்பதற் கென்றே பேசிடும்நூற்
றுறந்தநற் சுகமும் துக்கத்துக் கிடென்னும் சொல்லுங்கண்டேன்
கரந்தனைக் கூப்பியிச் சுடலையைக் காக்கக் கனிவுகொண்டேன்
வரந்தந்து உன்னடிக் கீழாயிருத்தி யெனை வாழ்விப்பையே.

அரி. வ-ம்:-ஏ கங்காதரா! இச்சுடலையில் நித்தமும் சித்தம் கலங்கி பித்து பிடித்தவன்போல் கத்தித்துடிப்பது உன் மனக்களிப்பாய் இருக்கின்றதா? பஞ்சையாகிய யான் எவ்வளவு துயர்தான் படமுடியும். ஐயோ! கருணாநிதியாகிய தாங்கள் இனி

யாவது கனிவுடன் கருணைகூர்ந் தருள்புரிய இச்சத்தியன் எதிர் விரைவாக தைரியம் கூறுதற்கு,

(இராகம்-பைரவி, தாளம்-ரூபகம்)

பல்லவி

வருவாயே வடமாலி நீ
வாராயோ வா நமச்சிவாயா வரு

அரி. வ-ம்:-நித்ய சொரூப ஜெகஜோதியாகிய நிமலனே! நேசமுடன் தாசர்கட்கு அருள்சுரக்கும் நிர்மல சொரூபனே! இவ்வடியேன் இம்மயானத்தில் முன்பிருந்ததையெல்லாம் நினைத்து வருந்தி வருந்தி பெருந்துயரடைந்து குருகுலத்தைத் தடுத் தாட்கொள்ள,

ஷை மெட்டு

வருவாயே வடமாலி நீ
வாராயோ வா நமச்சிவாயா வரு

அரி. வ-ம்:-கருங்குருவிக்கு உபதேசித்த கருணாகரா! காத்தினில் சூலத்தை ஏந்தி பக்தர்களின் எதிர்தோன்றி கனத்தவரத்தை யளிக்கும் கங்காளனே! அரசகோலத்திலிருந்த இவ்வடியேனை பரகோலமாக்கி பிணத்திற்கு காணிக்கை வாங்கி தகிக்கவும், அவர்களிடும் வாய்க்கரிசியைப் பெற்று ஜீவிக்கவும் நியமிக்க காரணம் யாதென இக்கசடனுக்கு கனிந்துரைக்க,

ஷை மெட்டு

வருவாயே வடமாலி நீ
வாராயோ வா நமச்சிவாயா வரு

அரி. வ-ம்:-வெள்ளை விடையேறும் விமலனே! வேதாந்த போத வித்தகானந்தனே! விண்ணவர் துதிக்க காளிகாதேவியுடன் அன்று காலைத்தூக்கி நடனித்த கடவுளே! விதியின் கொடுமையால் வேதனின் சிரத்தைத் திருகி காத்தில் ஏந்தி சுடலையில் ஆடிய கபாலமூர்த்தி! இக்காதகனால் இத்துயர் இனிபொறுக்க முடியாது. அப்படி முடிந்தாலும் இவ்வுயிர் நிலையாது. பிறகு இப்பழி பாவங்களுக்கு காரணம் நீயே? ஆதலால் தாங்கள் இடபவாகனரூடாய் பார்வதாதேவி ஒருபக்கமும், வேல்முருகன் விநாயகன் ஒருபக்கமும் அமர்த்தி, ஏக குடும்பமாக எளியேன் எதிர்தோன்றி தைரியங்கூறுதற்கு இச்சுடலையைநோக்கி,

ஷை மெட்டு

வருவாயே வடமாலி நீ
வாராயோ வா நமச்சிவாயா வரு

அரி. வ-ம்:-மலையத்துவஜனுக்கு மருகனான வள்ளலே! மான் மழு ஏந்திய மஹாதேவனே! முக்கண் படைத்த முதல்வனே!

காமனை எரித்துக் கடுந்தபத்தைக் காத்துக்கொண்ட கருணா நிதியே! இப்பாதகன் இவ்வளவு வருந்தியும்,

ஷை அநுபல்லவி

வருகத்தடையேனோ நாதா
வந்திடுவாய் கமல பாதா வரு

அரி. வ-ம்:-ஐயோ! மார்க்கண்டன் ஒரு அற்பமனிதனெனச் சிறிதும் நினையாது தேவர்களைவிட பக்தர்களே உயர்ந்தவர்களென எண்ணி,

ஷை சரணம்

மறலிதன்னை உதைத்த பாதா
மார்க்கண்டனைக் காத்த நாதா
பரமனே ஏனின்னும் வாதா
பாதுகாத் தருள் விநோதா வரு

திரிபுர தகனுதி சீலா
தேவரையன்று காத்த லோலா
அரியயனும் காணு மூலா
அடிபணிந்தேன் அருள் கபாலா வரு

அரி. வ-ம்:- அடியார்களுக்கு அருள்புரியும் ஆனந்தத் தெய்வமாகிய,

அரிச்சந்திரன் கண்ணி

(இராகம்-எதுகுலகாம்போதி, தாளம்-ஆதி)

அரனே கங்காதரனே உந்த னருளோ இது சிவமே
அடியேனிந்த வேடங்கொள்ள அமைத்தாய் விதி சிவமே அ

துரைமன்னர்கள் பணிமகுடம் தொட்டமுடி சிவமே
துண்டுலேஞ்சும் தான்கட்டிடத் தொகுத்தாய்விதி சிவமே அ

அம்புராதுணித் தாங்குந்தோளி லையோ இன்று சிவமே
அருங்கம்பளி ஏற்றவைத்தாய் அருமைநன்று சிவமே அ

வாளும்கச்சை வளரும்படி யணிந்தயிடை சிவமே
வருந்ததட்டி பூட்டிவைத்தாய் வகையறியேன் சிவமே அ

அரி. வ-ம்:-பஞ்சாக்ஷரப்பொருளே! நான் வருந்துவது கொஞ்சமேனும் உனது திருவுள மிரங்கவில்லையா. ஐயோ! பக்தர்களே! சித்தர்களே! நீங்களாவது அச்சிவபெருமானிடம் என்னைப்பற்றி சென்று முறையிடலாகாதா? ஐயோ பக்ஷிகளே! உங்களிலாவது ஒருவர் இச்சண்டாளனுக்காகப் பரிந்து ஆலமுண்ட ஈசனுக்கு அறிவிக்கலாகாதா? ஐயோ இப்பரம பாதகன் படுந்துயரத்தைப் பரமனிடம் பகருவதற்கு ஒருவரையுங் காணேமே? ஐயோ! இவ்வளவு துயருற்ற அரிச்சந்திரன் இரவும் பகலும் உன்னையே நினைத்து சிந்தித்து நொந்துருகு

கிறுன், மயானத்தில் தான் படும் துன்பத்தினுல் ஓலமிடு கிறுன், கதறுகிறுன், கதறுகிறுன் என்று,

தரு (இராகம்-ஆரபி, தாளம்-ஆதி)

யார்போய்ச் சொல்லுவார் இந்த வேளை
அரனுக்கோடி யார்

அரி. வ-ம்:-ஒரு பொய்க்காக உலகத்தை இழந்த அரிச்சந்திரன், அலறித் துடித்து மயானத்தில் நின்று வருந்துகிறுன், கூவு கிறுன் என்று,

ஷை தரு

யார்போய்ச் சொல்லுவார் இந்த வேளை
அரனுக்கோடி யார்

அரி. வ-ம்:-இச்சண்டாள அரிச்சந்திரன் இவ்வளவு கதிக்கும் ஆளா வதற்குக் காரணம் யாதெனில்,

ஷை தரு

மாமுனி தனக்கன்று வழங்கிய கடனுக்கு
காமுனி மாதையும் விற்ருன் சுடலை யுற்ருன் என்று யார்

அரி. வ-ம்:-ஆஹா! மாமுனிவரின் கடனுக்காக மனைவிதான் மறைய வனுக்கு அடிமையானுள், இம்மாபாவியின் மனதை தைரியப் படுத்த எனதருமை மைந்தனுவது என்னுடன் இருக்கப் படாதா? அம்மறையவர் மரத்தைவிற்ருல் கனியும் சொந்த மென்று எனை மிரட்டியதால்,

ஷை தரு

காலத்தில் வேதமோதும் காலகண் டையருக்கு
காதகன் பாலனையும் விடுத்தான் மனம் துடித்தான் என்று ()

அரி. வ-ம்:-மனைவி மைந்தனை விற்றபிறகு வாடினுன் வருந்தினுன், பிறகு நரகன் கூலிக்காக,

ஷை தரு

பூமியிற் பிணஞ்சுடும் புலையனுக் கடிமையாய்
சாமியென் றவன்காலைப் பிடித்தான் மனந் துடித்தான் என்று ()

அரி. வ-ம்:-புலையனுக்கு அடிமையானது மல்லாமல் இச்சுடலையில் பட்ட கஷ்டத்திற்கெல்லாம் இந்த அரிச்சந்திரன்,

ஷை தரு

யாரையும் நம்பாமலே அரஹர சிவாவென்று
பேரையே தினஞ்சொல்லி யிருப்பான் மனம் வெறுப்பான் என்று ()

அரி. வ-ம்:-எ! மூடமதியே! ஏன் வீணில் வாய்விட்டலறுகிறுய்? ஆஹா! இம்மனக்குரங்கிற்கு என்னமமதை, இன்பமுற்றக்கால் பல்லை இளிக்கின்றது, துன்பம்வருங்காலத்தில் முகத்தை

சுளிக்கின்றதே, பேஷ்; இதுதானு மானிடப் பிறவியின் மகுத்துவம்; சட், பேதைமனமே ஏதுக்கும் அஞ்சாதே நீ எப்போது ஒருவருக்கு அடிமையாய் நின்றனேயோ உன் சுகதுக்கம் உன்னுடைய பொருப்பல்ல, அற்பசுகத்திற்கு ஆசைவையாதே எஜமானுரைத்ததுபோல் காவலிரு.

[இதற்குள் சத்தியகீர்த்தி வருகிறுன்]

சத்தியகீர்த்தி தரு

(இராகம்-தர்பார், தாளம்-ரூபகம்)

ஆ சிவமே நல்லகதி ஆக்கினுய் சிவமே
அண்ணு அருள் வண்ணு இது நண்ணு முக்கண்ணு (ஆ)
அன்னை தந்தையென வெண்ணி யிருந்துயென்
னரசனைப் பிரித்தாயே அந்த
ஆதிலக்ஷிமி யைப்போ லொத்த என்தாயை
அடிமையாய் விடுத்தாயே
உன்னைகதி யென்றதுவும் உத்தமனைப் பிரிந்ததுவும்
தன்னந்தனி யானதுவும். தனையன்வேறே போனதுவும் (ஆ)

வேறு தரு

(இராகம்-செஞ்சுருட்டி, தாளம்-ரூபகம்)

தேடித்திரிகின்றேன் என்னண்ணலைத் தேடித்திரிகின்றேன்
தேடித் திரிந்துமே வாடிச் சேரிபார்த்தேன்
நாடிச் சுடலையை ஓடிநான் கண்டிட (தே)
காட்டைவிட்டே தனி பாட்டைவிட்டே சுடு
காட்டைக்காண வழி ஓட்டமாய் காட்டுக்குள் (தே)

[சத்தியகீர்த்தி பாடிவா அரிச்சந்திரன் அருகே வந்து]

அரிச்சந்திரன் விருத்தம் (மோகனம்)

ஆரடா பயலே யிந்த அடாத இவ்விருளில் வந்த
தாரடா சுடலை தன்னில் தயங்கிய வாறு தன்னை
கூறடா உந்தன் பேரை கொப்பென பேசா விட்டால்
பாரடா இத்தண்டத் தாலே பதைத்திட மாட்டு வேனே.

அரி. வ-ம்:-அடே! இவ்விருட்டுவேளையில் திருட்டுத்தனமாக வந்த முரட்டுத்தனெ கள்ளன் நீ யார்? இந்த ஜாமத்தில் இங்குவாக் காரணம் யாது?

சத்தியகீர்த்தி விருத்தம் (முகாரி)

ஆரென வென்று கேட்ட அன்புள்ள காவற் கா ரா
தீரனு மயோத்தி மன்னன் திகழடி காண வேண்டி
வீரமா யாவல் கொண்டு விரும்பியா னிங்கு வந்தேன்
வேறது வொன்று மில்லை வெறுத்தென்மேல் கோபிக்காதே.

சத். வ-ம்:-ஐயா! அயோத்திநகர்க் கதிபதியாகிய அரிச்சந்திரபூபதி இங்கிருப்பதாக கேள்வியுற்றேன். ஆதலால் அன்னவரைக் காணும்பொருட்டு இங்கடைந்தேன்.

அரி. வ-ம்:-என்ன! அரிச்சந்திரனையா? ஆ ஹா!

அரிச்சந்திரன் விருத்தம் (மோகனம்)

உனக்கந்த வயோத்தி மன்னன் உண்டிங்கு வந்தா னென்று
கனத்துட னுரைத்த பேர்யார் இக்கன லுறு சுடலை தன்னில்
வனத்துட னவனி ருக்கும் வாறுநீ கண்ட தேது
எனக்கதைத் தெரிய நன்று யியம்பினுற் கோபிக் கேனே.

அரி. வ-ம்:-அப் பரமபாதகனை தேடி வருபவர்களும் இப்பூவுலகில் உண்டா? அவன் இங்கிருக்க காரணமென்ன? அப்படி இருப்பதாக உனக்கு யார் தெரிவித்தவர்?

சத். வ-ம்:-மயான காவலரே! வீணில் எனது அண்ணலை நிந்தித்து பேசாதீர். அதாவது,

சத்தியகீர்த்தி விருத்தம் (முகாரி)

மாமுனி கடனுக்காக மன்னனும் காசிவந்தே
காமுனி மாதைவிற்று கடன்தீர்க்கத் தாகன்கூலி
சாமியை யன்றேகேட்க சத்திய கீர்த்தியானும்
நேமியை விற்றேன்தோட்டி நிதிதந்து கொண்டான் காணேன்.

அரி. வ-ம்:-ஹா! விதியே!

அரிச்சந்திரன் விருத்தம் (முகாரி)

அப்பனே சத்திய கீர்த்தி அரிச்சந்திரன் நானே கண்டாய்
இப்படி நீயும் வாட ஏற்குமோ எந்தன் பாலா
தப்பவே நமது மேன்மை தவமுனிக் குறியா நின்றுன்
கப்பியே துன்ப முன்னைக் கருதியே வந்திட் டாயோ.

சத். வ-ம்:-ஆஹா! மநுநீதி தவாாத அரசும், கேட்பவருக்கு இல்லையென்றுரையாத கெம்பீரமும், கரத்தில் கண்ணியம் பொருந்திய செங்கோலும், நவரத்தினங்களிஞெ லிழைக்கப்பெற்ற மணிமகுடம் துலங்க பல அரசர்களும் புகழும்படி பூச்சக்கரக் குடையின்கீழ் சிம்மாதனத்தில் அமர்ந்திருந்த தாங்கள்,

சத்தியகீர்த்தி விருத்தம் (செஞ்சுருட்டி)

நாதனே நீரு மிந்த நவிலொணுத் துன்பங் கொள்ள
காதக பிரம்ம னென்ன கருத்துட னெழுதி னுனே
தோதக நாசக்காரி துணிப்புட முனிவ னேடே
பாதக னுனுங் கண்டேன் பாவியு முயிர்வைக் கேனே.

அரி. வ-ம்:-இருந்ததையெல்லாம் நினைத்து வருந்துவதில் யாது பயன்? இக்காயத்திற்கு சுகமேது? துக்கமேது? வாழ்வும் சில

நாள், தாழ்வும் சிலநாள், யாவும் ஈசன் செயலேயன்றி வேறில்லே, இதன்பொருட்டு மனக்கவலே கூடாது போகட்டும். யான் இங்கு அடுமையானதுபற்றி சற்றும் சிந்திக்கவில்லே. ஆனல் இங்குவரும் பிணங்களுக்கிடும் வாய்க்கரிசியை அதோ ஓர் கும்பலாக குவித்துவைத்திருக்கின்றேன், அதன் தோஷத்தைப் போக்கும் மார்க்கம் என்னலறியக்கூடவில்லே.

சத். வ-ம்:-அரசே! அதை ஒரு கோவுக்களித்து அதன் சாணத்தை எடுத்து அலம்பினல் அடியில் அரிசிநிற்கும், அவ்வரிசியை எடுத்து சமைத்துச் சாப்பிடலாம் அரசே.

[அரிச்சந்திரனும் சத்தியகீர்த்தியும் செல்கின்றார்கள்]

சீன்-15 **இடம்-காடு**

[சந்திரமதி தன் மகனைத்தேடி வருகின்றாள்]

சந்திரமதி கண்ணிகள்

(இராகம்-சஹானு, தாளம்-ஆதி)

பாலனிறந்தவிட மிதுதானே எந்தன்
சீலன் மடிந்தவிட மிதுதானே
ஆலமர மென்பது இதுதானே சிறுவர்
சாலவே வைத்தகுறிப் பிதுதானே
காரைமுள் புதரென்ற திதுதானே மகன்
பேரை யழித்தவிட மிதுதானே
என்மகன் தேவதாச னிவன்தானே விஷத்
துன்மையால் மயங்கியே விழுந்தானே

[மகனைத் தூக்கிக்கொண்டு கீழே விழுகிறாள்]

சங். வ-ம்:-என் அருமையுள்ள மகனே! லோகிதாசா! லோகிதாசா! லோகிதாசனுகையால் இந்தலோகத்திலிருந்து என்ன பயன் என்று பரலோகம் சென்று தேவர்களுக்குப் பணிவிடை புரியப் போய்விட்டாயா? அப்பா கண்ணே! உன்னைப் பத்து மாதம் சுமந்துபெற்ற தாயார் வந்து கூப்பிடுகிறாள், உன்னை தொட்டிலிட்டு தாலாட்டிச் சீராட்டி பாலமிர்தமூட்டிய பாமபாதகி வந்திருக்கின்றாள்; நீ உனது கண்ணைத் திறந்து பார்த்து கனிவாயினல் ஒரு முத்தமளிக்க எழுந்திருந்து இந்த தாயின் எதிரில்,

சந்திரமதி தரு

(இராகம்-புன்னுகவராளி, தாளம்-ஆதி)

பல்லவி

வாடா என் கண்ணின்மணியே எழுந்தொரு முத்தம்
தாடா-யென் நவமணியே அப்பா

வாடா மகனே வாடா
அரும்பே வாடா கரும்பே வாடா
அய்யனே வாடா துரையே வாடா
பொன்னே வாடா கண்ணே வாடா
முத்தே வாடா வித்தே வாடா
உருவே வாடா திருவே வாடா
கனியே வாடா மணியே வாடா
விரைவாய் வாடா மருவே வாடா
மைந்தாய் வாடா குழந்தாய் வாடா
கொழுந்தே வாடா எழுந்து வாடா
கிளியே வாடா குயிலே வாடா
ஓடி வாடா நடந்து
வாடா என் கண்ணின்மணியே எழுந்தொரு முத்தம்
தாடா என் நவமணியே

சங். வ-ம்:-ஐயோ குழந்தாய்! நமது நாட்டிலிந்த சுகங்களையெல்லாம் விடுத்து புலி கரடி சிங்கம் யானை முதலிய ஜந்துக்கள் வசிக்கும் இந்த,

அநுபல்லவி

காடா உனக்கு மனை வீடாநீ யிங்குறங்க
பாடா வயன் விதித்த தோடா நான் பாவி பாவி (வா)

சங். வ-ம்:-செல்வத்திற் சிறந்து இங்கு சீர்குலைந்து கிடக்கும் செல்வமே! உனது பிதாவின் அடைக்கலத்தில் அந்த அயோத்திநகரில் அரசகோலத்தி லிருக்குங்காலத்தில் சற்றுநேரமாவது,

சரணங்கள்

பஞ்சணையை விட்டு இறங்காய் அடா மகனே
நெஞ்சைவிட்டுத் தாழவுறங்காய்
கொஞ்சும் கிளிமொழிக்கே அஞ்சுவையோடா அப்பா
வஞ்சக மிருகக்காட்டில் பஞ்சைபோல தூங்கலானாய் (வா)

சங். வ-ம்:-ஐயோ! எனதருமையிற் சிறந்த அன்னமே! அயோத்தி நகருக்கு இளந்தென்றலே! நீ நமது நகரில் உனது தோழர்களுடன் ஆடிப் பாடி விளையாடுவாய், அரண்மனைக்கு வருவாய், ஆனந்தமாக அம்மா! அம்மா! என்று அழைத்துக்கொண்டே,

சரணங்கள் தொடர்பு

சோச்சிசோச்சி யென்றிவருவாய் அடிக்கடிநீ
பாச்சிபாச்சி என்றுவருவாய்
காய்ச்சி ஈயம்செவியில் காய்ச்சிவிட்ட வாறுபோல்
ஆச்சி மக்களுமுரைத்த பேச்சினாலு நகலானேன் (வா)

சந். வ-ம்:-ஐயோ மகனே! அருமை மகனே! உனை எந்தகாலத்திலும், அப்பாமகனே ஓடி,

சந்திரமதி தரு

(இராகம்-இந்துஸ்தான், சுருட்டி, தாளம்-சாப்பு)

வா வா வாவென கூவியழைத்தாலோடி
வருவாயே மகனே முத்தம் தருவாயே சுதனே (வா)

கூ கூ வெனநான் தாவி யழைத்தவாயால்
பாவி யழைத்தகுரல் மேவியுன் னிருசெவிக்
கேறலேயோ மகனே ஏறலேயோ நான் பெறலேயோ மகனே (வா)

கொள்ளி வாயின்பூதம் குள்ள நரிகாடி
பல்லை யிளித்துமெந்தன் உள்ளம் நடுங்கிடவே
பார்க்குதடா மகனே பார்க்குதடா உனை காக்குதடா மகனே (வா)

சந்திரமதி விருத்தம் (முகாரி)

அப்பனே ஐயாவென்று உனை அழைத்திடும் பெருமை போச்சே
ஒப்பிநீ அம்மாவென்று உரைப்பதும் இன்றேபோச்சே
செப்பியே சாதங்கேட்கும் உன் செங்கனி வாயைமூடி
கப்பிய விஷத்தாலிந்தக் காட்டினில் மடிந்தாயோடா.

சந். வ-ம்:-ரவிகுலத்திலுதித்த ரத்தினமே! அந்தக் காலகண்டையர் உன்னைக் காட்டுக்கனுப்ப அவ்விடத்தில்,

சந்திரமதி கண்ணிகள்

(இராகம் - சாமா, தாளம் - ஏகம்)

ஐயோ மகனே அலறித் துடித்திட
அரவந்தீண்டலாச்சே அருள்போச்சே யிருளாச்சே
அப்பவே காண்ப தெப்பவே எப்பவே எ (ஐ)

கப்பிய காட்டினில் அப்பா தேவதாசா
காளந்தீண்ட விதியோ காரிமதியோ நாரிசதியோ
கண்ணனே சொல்லும் வண்ணனே வண்ணனே வ (ஐ)

பற்றி எரியுதே பெற்ற வயிறுமே
உற்றது சொல்லாயா பணிநேயா மணிவாயா
பாவியே எனைத் தாவியே தாவியே தா (ஐ)

உன்னைப் பெற்றதந்தை வந்து என்னைக்கேட்டால்
மன்னனுக் கேதுரைப்பேன் உருக்குரைப்பேன் செருக்கரைப்பேன்
ஓதடா துணை ஏதடா ஏதடா ஏதடா (ஐ)

அருந்தவம் செய்துமே வருந்தியே நான்பெற்ற
தருமகுண பாலனே அதிலோலனே மதிசீலனே
அன்னமே அடா சொர்னமே சொர்னமே சொ (ஐ)

சந். வ-ம்:-அடா என்னப்பனே! நீ இந்த கானகத்தில்,

சந்திரமதி தரு

(மருவே செறித்த குழலாள் என்ற மெட்டு)

பனிபால் நனைந்து வெயிலா லுலர்ந்து பசியாலலைந்து முலவா
அனியாய வெங்க ணரவா லிறந்த வதிபாவ மென்கொ லறியேன்
தனியே கிடந்து விட்டோய் செறிந்து தரைமீதுருண்ட மகனே
இனியாரைநம்பி யுயிர்வாழ்வமென்ற னிறையோனும்யானு மவரே.

சந். வ-ம்: - அப்பா! எனது ஆனந்தமெல்லாம் ஒருங்குசேர்ந்து திரண்டுவந்த அமுதமே! உனக்கு அழகையும் அறிவையும் அமைத்த அச்சண்டாள நான்முகன் ஆயுளை எழுதுவதற்கு மறந்தானு? ஆஹா!

சந்திரமதி அகவல்

என்னுருயிரே எனதுகண்மணியே
முன்னுளிலுங்களையர் முக்கண்ணனைநோக்கி
அன்னமுண்ணமல் அருந்தவஞ்செய்தார்
பிள்ளையில்லாமல் பெருந்தவம்செய்தார்
வெள்ளைவிடையோன் விமலனாருளினல்
நீ கருவுருவாகியே காரணமாகியே
திருவுருவாக ஜெனிக்கயென்வயிற்றினில்
நீஜெனித்த ஓராமாதம் உடலதுதளர்ந்து
ஈராமாதம் இடையதுதளர்ந்து
பச்சைநரம்புகளோடிப் பால்முகம்சுரந்து
மூன்றுமாதம் முகமெலாம்வெளுத்து முலைநுனிகறுத்து
நான்காமாதம் அடாநான்பெற்றமகனே நசுக்கியமசக்கை
ஐந்தாமாதம் என் அழகுள்ளமகனே அழகுசீமந்தம்
ஆறுமாதம் அடிவயறுகனத்து அரையதுநொந்து
ஏழாமாதம் என்னுவுக் கினியதைப்புசித்தேன்
எட்டாமாதம் பட்டணமறிய என்பாங்கியோடுநான்
தொட்டுமேபட்டுப் பாவாடை யுடுத்தினேன்
ஒன்பதாமாதம் உன் மாமன்மார்வந்து ஓவியமுடனே
எந்தனுக்கன்று சீமந்தஞ்செய்ய
பத்தாமாதம் பாலகாவுந்தனை மெத்தவேதனையால்
நெற்றியில்வேர்வை நிலத்தினில்வீழ்க
பற்றியேயுன்னைப் பாலகாபெற்று
இவ்வனப் பாம்புக் கிரையிட்டேன் பாலா

சந்திரமதி தரு

(தசரதராஜ குமாரா என்ற மெட்டு)

அருந்தவத்தா லுதித்த பாலா
எந்தன்சீலா அருள்மூலா அனுகூலா (அ)

பருவ மகனேநீ பார்ப்பான் சொற்படியே
பக்குவ மாகத்தர்ப்பை பறித்தாய்நீ துடியே
வருத்தப்பட அரவம் வகையாயுன் முடியே
வருந்தக்கடித்து தேவ தாசா
மாண்டாய்நேசா மந்தகாசா லோகிதாசா (அ)

படுபாவி யுன்னைக்கண்டு பரதவித் தேனே
பட்ட பாடெல்லாம் நினைந்தே யழுதேனே
கடுகி யெழுந்தொரு வார்த்தைசொல் தேனே
காதகி யென்னைக்கண்ணால் பாராய்
வார்த்தைகூறாய் முத்தம்தாராய் வெகுசீராய் (அ)

சங். வ-ம்:-சூரிய வம்சத்தி லுதித்த சுந்திரா! நீ இவ்விதமாக இக்காட்டில் விஷந்தீண்டி இறந்தாய். உன்னை இச்சண்டாள சந்திரமதி உன்னுடலைவைத்து பைத்தியக்காரிபோல் அனாதியாய் காட்டில் புலம்பிக்கொண்டிருக்கிறாள், தயங்குகிறாள், இருந்த சுகத்தையெல்லாம் நினைந்துருகுகிறாள், உனைப் பார்த்துப் பார்த்துக் கதறுகிறாள் என்று,

சந்திரமதி தரு

(இராகம்-ஆரபி, தாளம்-ஆதி)

யார்போய் சொல்லுவார் இந்தவேளை
என் நாதனுக்கோடி (யா)

சங். வ-ம்:-மதிதயனின் யாகத்தில் மாங்கல்யத்துடன் ஜனித்த சந்திரமதி, மணாளனின்வார்த்தைக்கு மறுத்துபேசாமல் இன்பத்தைவிட துன்பத்தை சிலாக்கியமாகக்கொண்டு தவசிரேஷ்டரின் கடனைத் தீர்க்க காலகண்டையருக்கு அடிமைபுகுந்த சந்திரமதி, அத்தகை சண்டாளியாகிய இந்த,

பாட்டுத் தொடர்

பாவி சந்திரமதி பழிகாரி பெற்றபாலன்
பாம்பு கடித்திறந்து பரமபதம் சேர்ந்தானென்று (யா)
இறந்த மகனைக்காட்டில் எடுத்துப் புலம்பிபாவி
ஏங்கியேங்கிப் புலம்பி இளைத்து விழுந்தாளென்று (யா)
காசிவிஸ்வேசா உந்தன் கருணை யில்லாதநேனோ
கன்றிழந்த பசுபோல கதறித் துடித்தேனென்று (யா)

சங். வ-ம்:-ஐயோ! என் அழகுள்ள துரையே! உனை தகனம்செய்து வேதியரிடம்போகவேண்டாமா? ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவாரோ இம்மானிலத்தில், என்னும் மூதாதைகளின் வாக்கியப்படி உயிரற்ற உன் உடலைக் கரத்தில் தாங்கி,

(இராகம்-கேதாரம், தாளம்-ரூபகம்)

போரேனிதோ போரேனிதோ போரேனிதோ போரேனிதோ
போரேனிதோ போரேனிதோ சுடலை
தேரேன் துய ராறேனப்பா
காரே னுன்னை பாரேனினி (போ)
நில்நில்லென்றே கல்லெறிந்து
சொல்லும்பூதத் தல்லல்நீக்கி (போ)

[சந்திரமதி போய்விடுகிருள்]

சீன்-16] [இடம்-மயானம்

நடிகர்:-அரிச்சந்திரன், சத்தியகீர்த்தி, சந்திரமதி.

[அரிச்சந்திரனும் சத்தியகீர்த்தியும் வருகிருர்கள்]

அரி. வ-ம்:-ஆ இளம்பிறையை முடிமீது அணிந்த,

அரிச்சந்திரன் தரு கண்ணிகள்

(இராகம்-நீலாம்புரி, தாளம்-ஜம்பை)

ஆதிசிவ சங்கரனே அடியேனிச் சுடலைவர
பாதிமதியோன் தனது பக்ஷமதோ மந்திரி (ஆ)
சத். சங்கரனும் முன்னொருநாள் சாம்பவியுடன்கூடி
இங்குதங்கி நடனமிட்ட விடமிதுகாண் அரசே
அரி. காஷ்டமடுக்கிச் சவத்தைக்கிடத்தித் தனல்மூட்டிடவும்
வாட்டமுடன் நாற்றமதில் வருந்துவதேன் மந்திரி
சத், இத்திரு வாசனைகொள்ள எந்நாளுமிவ்விடத்தில்
ருத்திரனும் வீற்றிருப்பார் உண்மையிது அரசே
அரி. கைதனிலெ கோலேந்தி காவலிங்கு யான்புரிய
வையகத்தி லென்னகுறை வகுத்தேனோ மந்திரி
சங். வறுமைசுக மன்புபொருள் வாழுலகோர் புரிவதெல்லாம்
தரும மறிந்தேநீதி தாவிடுங்கோ லரசே
அரி. நித்திரை யின்றேவருது நேயமுட னென்காவல்
பத்தியாய்ப் புரிபவர்யார் பகர்ந்திடுவாய் மந்திரி
சத். நானிருந்து காவல்செய்வேன் நாயகா நித்திரைநீர்
தான்புரிய ஏதுதடை தயவுசெய்வீர் அரசே

[அரிச்சந்திரன் நித்திரைபுரிந்து திடுக்கிட்டு எழுந்து]

அரிச்சந்திரன் தரு

ஆலய பூசைகள் அனுதினம் தவருமல்
அன்பாய் நடந்தேருதா மந்திரி

[கண்ணை விழித்துப் பார்த்து]

அரி. வ-ம்:-ஆஹா! என்ன இது ஆச்சரியமான சொற்பனம், அப்பா மந்திரி!

சத். வ-ம்:-ஏனையனே!

அரி. வ-ம்:-நான் எதற்காக இத்தகை கனவு கண்டேன்.

சத். வ-ம்:-என்ன கனவு கண்டீர் அரசே!

அரிச்சந்திரன் அகவல்

மந்திரி கேளாய் மகிழ்வுடன் யானும்
சுந்தரப் பரணைமேல் சொக்கினே னளவில்
கனவது கண்டேன் கழறுவேன் நீதான்
நினைவுடன் கேட்டே நிகழ்த்துவாய் பலனை
ஒருபெரும் பூதம் ஒடுங்கிப் பதுங்கவே
மருளுடன் மற்றொன்று மகிழ்ந்து சந்தோஷமாய்
ஜெயஜெயத் தோட்டி ஜெயம்பெறு வென்றே
நயமுட னுரைத்தே நாட்டியம் செய்தது
பெண்பூத மொன்று பிள்ளையை யேந்தியே
என்னெதிரி முன்பா யிருத்தியே நின்றது
பாம்புரு வாகப் பதைத்தொரு பூதம்
தேம்பிடச் சிசுவின் தேகத்திற் றங்க
காலுங்கை யில்லாக் கரும்பூத மொன்று
மேலாக வென்றே மிசைந்தோடக் கண்டேன்
கொள்ளிவாய்ப் பிசாசம் கூடொரு பிடாரியும்
கள்ளனைப் போலவே கறுத்த மேனியாய்
கோலக் கிடாவின்மேல் கொண்டிடக் கண்டேன்
நாலொரு தலையுடன் நகைத்தொரு பூதம்
சிரித்துமே யாடச் சிரசினில் மயிரை
விரித்துநிர் வாணமாய் வேறொரு பூதம்
பக்கத்தி லேயொரு பராசினைத் தாங்கி
கக்கத்திற் சட்டியும் காலையும் தூக்கியே
வந்தெதிர் நிற்க வாயது குளறி
என்திரேகம் மறந்து ஏங்கியே நின்றேன்
வெள்ளி முளைத்திட விடிந்தது பொழுதென
துள்ளிநா னெழுந்து தொடுத்துச் செங்கோலினை
தேச விசாரணை திறமுடன் புரிந்தேன்
மோசமென் வருமோ மொழிகுவாய் மந்திரி

சத். வ-ம்:-ஐயனே! ஆஹா! என்ன பாக்கியம்?

(இராகம்-பைரவி, தாளம்-ஆதி)

பல்லவி

பெருமை பெருகக்காலம் பெம்மா னருனாளெனைப்
பெற்றவா வாரும்பாரீர் (பெ)

அநுபல்லவி

அருமையாய் நீர்கண்ட அச்சமில்லாக் கினவால்
அடையும் பலனைச்சொல்வேன் ஐயா இனிமேல்நீரும் (பெ)

சத். வ-ம்:-அரசே! தாங்கள் தற்போது கண்ட சொற்பனத்தின் பொருட்டு பெருமை பெருகக் காலம் வந்துவிட்டது. துன்ப மனைத்தும் துலைந்தது, ஏனெனில் நடுங்கிய பூதமானது தங்களை இவ்வளவு கஷ்டத்திற்கு ஈடுபடுத்திய கௌசிகன், ஆடிய பூதம் தங்களின் குருபிரானாகிய வசிஷ்டர், பெண்பூதமோ எனது தாயாகிய தங்களின் மனைவி, பிள்ளையென்பது நமது தேவதாசன், பாம்பென்பது அப்பன்னிருகை வேல்முருகன், கொள்ளிவாய் பூதமானது அக்கினிபகவான், பிடாரியானது உமா மகேஸ்வரி, வெள்ளியானது சுக்கிரன், இவர்களின் தரிசனமும் இன்னும் அநேக தேவர்களின் தரிசனார்த்தமும் காண்பதற்குக் காலம் நெருங்கிவிட்டது. உமது அரசும் பழையபடி உம்மிடமே வந்தமையும் ஐயனே.

அரி. வ-ம்:-மந்திரி! உண்மைதானா? எல்லாவற்றிற்கும் ஈசனே துணை; வா சென்று இச்சுடலையைச் சுற்றிப் பார்த்துவாலாம்.

[இருவரும் போகின்றனர் சந்திரமதி வருகிறாள்]

சந்திரமதி தரு

(இராகம்-கேதாரம், தாளம்-ரூபகம்)

என்னைச்சுட உன்னைப்பெற்றேன் உன்னைச்சுட அன்னையும்நான்
வந்தேனடா வந்தேனடா வந்தேனடா சுடலை

சந். வ-ம்:-பெற்றவயிற்றினில் அனலைமூட்டி தற்பரனின் நிழலையடைந்த தனையனே! மடிந்த உன் மாதாவாகிய யான் கண்டு புலம்பினேன், கதறினேன், உனை நினைந்து நினைந்து கனிந்தேன், முடிவில் இம்மயானமடைய துணிந்தேன், துணிந்தும் உனை தகனம்செய்ய கட்டைமுட்டைகளுக்கு கதியற்ற பாவியானேன், என்னசெய்வேன், இம்மயானத்தில் எரிந்துகிடக்கும் கட்டைமுட்டைகளையாவது பொறுக்கி எடுத்துவந்து உன்னை தகனிக்கின்றேன். ஆஹா! உத்தமர்களுக்கு சித்தமிரங்கி முத்தியை யளிக்கும் சித்த சுத்த சைதன்யாக இந்நகரில் திருக்கோயில்கொண் டெழுந்தருளியிருக்கும்,

(இராகம்-ஸ்ரீராகம், தாளம்-ஆதி)

காசி நாதா இதுவுன்னருளோ
காட்டினில் மைந்தனை நீட்டினே னுன்வசம்
மேட்டியே யான்வரு மட்டிலு மையா (கா)

[சந்திரமதி மகனை கீழே வளர்த்தி கட்டைமுட்டை பொருக்கச் செல்கிருள்]

ஷெடி ராகம்

எருமுட்டை பொருக்க வைத்தாய் சிவமே
முன்னு ளினில்யான் என்ன பாதகம்
பண்ணினேனே வன்றி உன்னருள் தானே (கா)
கட்டை தேடவே விட்டாய் கதியே
காதல் மிகுத்திடும் போதக ரளித்த
தீதில்லாப் பாலனைப் பாதகி சுடவே (கா)

சந். வ-ம்:-மகனே! உன்னை தகனிக்க கட்டை முட்டைகளை சேகரித்தேன்.

[சந்திரமதி காஷ்டமடுக்கி மகனை வளர்த்துகிருள்]

காஷ்டத்தில் நீ படுப்பாய் மகனே
கல்லிதோ வைத்தேன் நல்லொளி வாய்க்கே
மெல்லிய மணலைத் தெள்ளுறே னரிசியாய் (கா)
கொள்ளி வைக்கவே போறேன் மன்னு
கூவி யும்மைநான் பாவி யழைத்தகுரல்
மேவி யுமதுவிரு செவியில் நுழையலையோ (கா)
ஓடி வருவீர் பிராண நாதா
உத்தமா உனக்குதான் பத்தியாய் நடந்தது
சத்திய மாகினில் இத்தகி வருவீர் (கா)
எரியுதே கட்டை பற்றி அப்பா
என்னரும் விழியின் தன்னுள மணியே
யுன்னருந் தேகம் பற்றுதே மகனே (கா)

[சுற்றிவந்து கீழேவிழுகிருள், அரிச்சந்திரன் ஓடிவருகிருன்]

அரிச்சந்திரன் சிட்டாநோட்

ஓஹோஹோ இதுவென்ன ஒத்தைக்குரல் கேழ்க்குதே
ஆஹாஹா இதுவென்ன ஆச்சர்ய மாச்சர்யம்
பார்பார் செய்கிறதைப் பார்க்கச் சகிக்கிலேன்
சீர்சீராய்ச் சென்றுஇதோ சோதித்து வருகிறேன்.

அரிச்சந்திரன் விருத்தம் (மோகனம்)

என்னமோ புதுமையாக இருக்குது மந்திரிபாராய்
வன்னிருள் தனிலேயிந்த வனத்தினில் யாரோகாணேன்
திண்ணமாய்க் காஷ்டமேற்றி தீயதை மூட்டுகின்ருர்
உண்ணிநான் அவ்விடஞ்சென்று வுருபார்த்து வாறேனப்பா.

[சந்திரமதியின் அருகில் வந்து]

அரிச்சந்திரன் விருத்தம் (மோகனம்)

ஆரடி கள்ளிநீதான் அடாதஇவ் விருளில்தானே
பேரிடி மழையில்வந்து பிணந்தனைச் சுடவுமானய்
கூறடி யுந்தனுக்கு கொளுத்துமிப் பிணத்தின்வாறும்
தாரடி யாண்டை வார்த்தை தடுத்திடில் விடமீயேனே.

அரி. வ-ம்:-சட் கள்ளி! யான் இங்கு காவலிருக்க எனது உத்திரவைப் பெருமல் இவ்விடம் வந்து காஷ்டமடுக்கிய கள்ளிநீ,

அரிச்சந்திரன் ஓரடி

(இராகம்-காம்போதி, தாளம்-ஆதி)

ஆரடி ஆரடி இந்த அர்த்தராத்திரி வேளைவந்து
அச்சமின்றி மயானத்தில் சவத்தைச் சுடும்கள்ளிநீ ஆ

கூறடி கூறடி நீயும் பாரடி திரும்பியெனை
பாவியெந்தன் காவல்மீறி மேவிவந்த ஜாலிநீலி ஆ

நடுஜாம வேளையதில் படுபாவி நீயும்வெகு
திடமுடனே மெத்த படபடப் பாகவே
காஷ்டமதை யடுக்கி வேஷ்டை யுடனேசிவ
சாக்ஷாத் காசிநாதனை மாக்ஷிமை யாகவே
நினைந்து மனங் கனிந்து எனைச்
சினந்து பாதம் பணிந்து
பாசாங்கிட்டே புலம்பி நீசன் எனக்குச்சேரும்
காசும் துண்டும் கொடாமல்
பதறப் பதறவேநீ கதறிக் கதறியழ
இதமல்ல உந்தனுக்கு பதமா யெடுத்துச்செல்வாய் ஆ

அரி. வ-ம்:-சட் துஷ்டி! கேட்கும் கேள்விக்கு பதிலுரையாது மௌனம் சாதித்தால் குழந்தையைத் தகனம்செய்துவிடலாம் என்னும் கருத்தா? சட்,

தரு

சோரத்தனமாய்க் காவல்மீறி
சொல்லாமலேன்வந்தாய் சொல்லு சொ-சொ கள்ளி
யாரடிநீ இங்குவந்தவள் யாரடி-நீ

பொல்லாத நீலிநீ வன்னமாங் காட்டினில்
வந்தழலானய் யார் நில்லு நில்-நில் கள்ளி
யாரடிநீ இங்கேவந்தவள் யாரடி-நீ

நள்ளிருள் தன்னிலே பிள்ளையை ஏந்தியே
கொள்ளி வைக்கவந்த கள்ளி க-க-கள்ளி
யாரடிநீ இங்கேவந்தவள் யாரடிநீ

சந்திரமதி விருத்தம் (முகாரி)

கன்னிகா னல்லவையா கபடியு மல்லவையா
துள்ளியென் பாலன்காட்டில் தோன்றிய நஞ்சால்மாண்டான்
நள்ளிருள் தனிலேதாங்கி நானிந்தச் சுடலைகண்டேன்
கொள்ளியை வைக்கலானேன் கோபத்தை பொறுப்பீர்போற்றி.

சந். வ-ம்:-ஐயா! மயானகாவலரே! யான்கள்ளியுமல்ல, கபடியுமல்ல, என் மகன் காலகதியினால் கானகத்தில் காளந்தீண்டி இறந்தான், அவனைக் கொண்டுவந்து தகனம் செய்தேனே யொழிய வேறில்லை.

அரி. வ-ம்:-ஆஹா! என்ன தைரியமாகப் பேசுகின்றாள்.

அரிச்சந்திரன் விருத்தம் (மோகனம்)

சுடலையை ஆளுமெந்தன் சுவாமியி னருட்படிக்கே
கடமையை வாங்க இங்கு காவல்நான் இருக்கநீயும்
திடமுட னுத்தரவுமின்றி தீயதை மூட்டலானாய்
நடநட பிணத்தைத்தூக்கி நாடியுன் பதியைத்தானே.

சந்திரமதி தரு

(எண்ணாத எண்ணமெல்லாம் என்ற மெட்டு)

காவலிங் குண்டேயென்றன் கனவிலுநா னறியேனையா
பாவிநான் அடிமைத்தொண்டு பரதேசி கடமையீய ஐயனே ஐ ஐ

தாவியே படைத்திருந்தால் தனித்திங்கு வருகுவேனோ
கோவியாதென்மேலிந்த குழந்தையைச்சுடசெய்வீரே ஐயனே ஐ ஐ

அரி. வ-ம்:-சபாஷ்! மகாநீலி; இவள்,

அரிச்சந்திரன் விருத்தம் (மோகனம்)

நாட்டினி லெதற்குமஞ்சா நாரிநீ நீலிநீலி
வாட்டமில் லாமலிங்கு வந்ததுமன்றி மெத்தவெகு
நீட்டமாய் பேசலுற்றாய் நிர்மூடி சவத்தைத்தூக்கி
ஓட்டமாய் எடுத்துச்செல்வாய் உதைத்திட்டேன்கள்ளிபாராய்.

[பிள்ளையை உதைக்கிறான், சந்திரமதி பிள்ளையைப் பிடித்துக்கொண்டு]

சந்திரமதி கண்ணி

அடா பாலாவிந்த அவதியென்னடா சீலா
அங்கம் பதறத்தோட்டி அதட்டி உதைத்தானே பா

சந். வ-ம்:-ஆ மகனே! அப்பா மகனே!

அரி. வ-ம்:-என்ன, ஆ மகனே! அப்பா மகனே! அடி,

அரிச்சந்திரன் கண்ணி

(இராகம்-மோகனம், தாளம்-சாப்பு)

மகனே மகனே யென்று ஜெகஜாலி யிருட்டினில்
பகவானை நினைக்கின்றாய் என்னடி அதை
சுகமா யெனக்குநீ பன்னடி
சகலரு மயங்கிடச் சாதிக்கிறாய் மொழி
சாத்துவேன் கோலினால் பாரடி-அடி மக

சந்திரமதி கண்ணி

என்னடி எனத்தோட்டி வின்னமாய்ப் பேசிடும்
சின்னமொழி கேட்க லாச்சுதே
என்வன்ன மேனிகுன்றிப் போச்சுதே
மன்னவர் பாதத்தை மனோவாக்காற் பூசித்தும்
மயானத்தி லிக்கதி யாச்சுதே என்

அரி. வ-ம்:-ஆ பரமேசா! ஒரு பெண்பேதை வாயால் தோட்டி யென்றும், பறையனென்றும், வெட்டியானென்றும் கேழ்க்க விதியா? ஆஹா! எவ்வளவோ புண்ணியத்தைச் செய்து, சூரிய வம்சத்தில் திரிசங்குவின் புதல்வனாகப் பிறந்தேனே யன்றி,

அரிச்சந்திரன் தரு

ஆதியிலும் பறையனல்ல ஜாதியிலும் பறையனல்ல
நீதியிலும் பறையனல்ல
பாதியில் பறையனாகினேன் பராபரமே
யார்போய் சொல்லுவார் அரனுக்கோடி யார்

பத்தினியை விற்றபாவி பாலனைக்கை விட்டபாவி
சத்தியத்தைக் கார்த்தபாவி தாணியில்நான் பெரும்பாவி ஓ சிவமே
யார்போய் சொல்லுவார் அரனுக்கோடி யார்

செங்கோலை யானிழந்தேன்
செத்தமாடு அறுக்கலுற்றேன்
கோவுதின்ன புல்லறுத்தேன்
புலையனிட கால்பிடித்தேனே பராபரமே யார்

அரி. வ-ம்:-இவ்விதமெல்லாமிருக்க,

அரிச்சந்திரன் கண்ணி

(மகனே மகனே என்று என்ற மெட்டு)

வெட்டியா னென்றுமே மட்டிப்போல் பேசுறாய்
கெட்டித்தனமுள்ள பாதகி இனி
எட்டிநடவடி காதகி

பட்டித்தன வாக்கைப் பதராதே கதராதே
பாரில்பொல்லாக்குண காதகி மகனே

சந்திரமதி விருத்தம் (முகாரி)

நதிவளம் பெருகும்காசி நகர் தனில் சுடலேகாக்கும்
அதிபதி கேளென்பாலன் அரவத்தால் மாண்டான் காட்டில்
விதியினல் சுடவேநானும் வெந்தண லவித்திரையா
கதியில்லே காசுக்கென்னே காப்பாயுன் கழலேபோற்றி.

அரி. வ-ம்:-ஐயோ! யான்தான் அதிக துன்பத்திற்குள்ளாகினே னென்றால் எனேவிட இம்மாது பன்மடங்கு அதிகமாக துக்க சாகரத்தில் ஆழ்ந்தவள்போல் தோன்றுகிறதே, என்ன செய்வது.

அரிச்சந்திரன் விருத்தம் (காம்போதி)

போற்றியென் றுரைத்தமாதே புகலுவேனென்று ஆண்டை
சாற்றிய வாறுபோலச் சவந்தனேச் சுடவேகூலி
மாற்றிடேன் துண்டுக்காசும் மகிழ்வுட னரிசியீந்தால்
ஏற்றியே சுடுவேனென்னே எஜமானும் மதிப்பார்பெண்ணே.

சந். வ-ம்:-ஐயா! மயான காவலரே.

சந்திரமதி விருத்தம் (முகாரி)

துண்டுகாற் பணத்தினேடு தோகைவாய்க் கரிசிதானும்
கொண்டளித் திடவெனக்குக் கூடுமா யிருக்குமாயின்
கண்டிருள் தனிலேயானும் காளிபோற் சவத்தைஏந்தி
ஓண்டியாய் வருகுவேனே உத்தமா விடைதாவையா.

அரிச்சந்திரன் விருத்தம் (செஞ்சுருட்டி)

விடையது கொடுக்கநானே வெட்டியா னடிமைகண்டாய்
தடையது செய்தாலென்னேத் தண்டிப்பா ரெஜமான்கண்டால்
கடையனுன் எனக்குச்சேரும் கழறுவாய்க் கரிசிவேண்டேன்
படைத்துநீ காசுந்துண்டும் உன்பாலனேச் சுடுவாய்மாதே.

சந்திரமதி விருத்தம் (முகாரி)

ஐயனே வுரைப்பேன்யானே அரும்பாவி கெதிவேறில்லை
வையகம் தனிலெனக்கு வாழ்மனே சுற்றமில்லை
கையினில் காசும்துண்டும் கவர்ந்திட வகையுமில்லை
துய்யரே மனுவுதாராய் தொழுதடி கமலம்போற்றி.

[அரிச்சந்திரன் சந்திரமதியை யுற்றுப்பார்த்து]

அரி. வ-ம்:-என்ன! பேஷ்! அறிந்தேன் அறிந்தேன் உனது பசப்பு மொழிகளேனத்தும் அறிந்தேன், ஏ மாதே! உனக்குக் கதி யில்லே?

சந். வ-ம்:-இருந்தால் எதற்காக இவ்வளவுநேரம் தங்களிடம் கெஞ்சிக் கேட்கின்றேன்.

அரி. வ-ம்:-சட், துஷ்டி! சுற்றமில்லை?

சந். வ-ம்:-இல்லை.

அரி. வ-ம்:-ஆஹா! பதியில்லை?

சந். வ-ம்:-இருந்தும் தற்போதிங்கு இல்லை.

அரிச்சந்திரன் விருத்தம் (மோகனம்)

கெதியில்லை சுற்றமில்லை கிட்டிட வகையுமில்லை
பதியில்லை யென்றுமிங்கே பணிந்துமே யுரைத்தகோதே
மதிதனி லுணர்ந்தேனுன்னை மகாஜாலி நீலியென்றே
சதிமிகும் தாலிதன்னைச் சங்கமாய் விற்றுத்தாராய்.

சந்திரமதி தரு

என்னகாலம் இந்தக்காலம் எங்களுக்கு வந்தகோலம்
அன்னமே காசியில்வாழும் ஆதியே விசாலாக்ஷி (எ)

தேவர்மூவர் சித்தர் தேடினும் கண்ணிற்காணாத
ஓவியமுற்ற வென்றூலி ஓகோதோட்டி காணஆச்சு (எ)

அரி. வ-ம்:-ஆ! இதென்ன பரிதாப நிலைமை, இப்பெண்பால் யாராயிருக்கலாம், இவளது முகக்குறியும் இவள் தெரிவிக்கும் ஒவ்வொரு வார்த்தைகளும் சந்தேகத்திற்கு இடமளிக்கின்றது. ஏ பெண்ணே! இப்பறையன் உனது,

அரிச்சந்திரன் விருத்தம் (செஞ்சுருட்டி)

தாலியைக் கண்டேனென்று தவிக்குறாய் தயங்குகின்றாய்
நீலிபோல் வந்துமென்னை நிந்தித்துப் புலம்புகின்றாய்
சீலியாந் தேவிதன்னைச் சிந்தித்து வருந்துகின்றாய்
பாவிநீ யார்தானிந்தப் பாலன்யார் பகருவாயே.

சந். வ-ம்:-ஐயா! என்னுடைய சவிஸ்தாரங்களை யுரைத்தால் கல்லுங் கறையும், இரும்பும் இளகும். ஆயினுஞ் சொல்லுகிறேன், கேளுமையா?

சந்திரமதி அகவல்

ஆரென வென்னை அன்புடனே கேட்ட
வீரவாகுவே நான் விளம்புவே னையா
கன்னமா புரியைக் காத்திடு ராசன்
நன்னருந் தவத்தால் நானுதித் தேனே
என்னுடன் கூடவே எழிலுறுந் தாலியும்
உன்னத மாகவே ஓங்கியே வளர்ந்தது

அயோத்தியை யாண்ட அரிச்சந்திர தீரர்
வியோத்தம ரென்னை வேண்டியே மணந்தார்
சந்தோஷ மாக சகலமும் படைத்து
இந்தநற் புதல்வனை யீன்றனன் பாவி
கௌசிகர் தானும் கபடமே நினைந்தே
தவசுக்குப் பொன்தான் தாவென வாசர்
ஈய்ந்தனர் வாங்கி இருந்து முன்னிடமென
சாந்தமாய்ச் சென்றுபின் சகிக்கொணுக் கோரம்
பண்ணியே நாட்டைப் பறித்துமே கொண்டு
இந்நகர் தனிலே யீகுவே னெனவே
மன்னவர் பின்னே மாபாவி யான
தரகனென் றொருவன் தகாத வாதாடி
கரமதில் கிட்டிதான் கல்லை நெற்றியிலும்
இட்டனன் பாவி யிறைவருக் கங்கே
பட்டவிப் பாலனும் பதைக்கவும் கிட்டியை
பூட்டினுன் தோஷி பொறுக்காம லென்மனம்
நாட்டினில் விற்கவே நயந்திட வாசர்
விலையது கூறி விற்றிடச் சகல
கலைகளு முணர்ந்த காலகண் டைய்யர்
விலைக்கெனை வாங்கியே வேந்தனை மிரட்டிக்
குலக்கதிர் பாலனைக் கொண்டனர் தன்வசம்
தொண்டது புரிந்தே தொழுதிடும் நாளிற்
கொண்டுவா சமித்தெனக் குழந்தையா மிவனை
காட்டிற்கே யேவக் கடித்துமே பாம்பு
மாட்டிய விஷத்தால் மாண்டனன் பாலன்
வேந்தனும் மந்திரியும் விடையது கொடுத்தே
சார்ந்தன ரெங்கையோ சதியா னறியேன்
என்குறை மெத்த விருக்குது உரைத்தேன்
நன்மதி புரிந்தே நயந்துவாக் கருள்வாய்
பாலனைச் சுட்டபின் பாதகி சடுதியிற்
காலகண் டன்மனை கருதிட ஐயா.

அரி. வ-ம்:-ஹா! லோகிதாசா!

[கீழே விழுந்து குழந்தையைக் கையில் தாங்கி]

அரிச்சந்திரன் விருத்தம்

(தேசிகமுகாரி)

சூரியன் மரபின்றேடு சோர்ந்ததோ அழிந்துபோச்சோ
காரியி னெண்ணமாச்சோ கௌசிகன் சதிக்குள்ளாச்சோ
கோரிநான் பெற்றபாலன் குவலய மாண்டிடாமல்
காரிருள் காட்டில்பாம்பு கடித்துமே இறக்கவையோ.

அரிச்சந்திரன் தரு

(இராகம்-பியாகு, தாளம்-ரூபகம்)

தாயைவிட்டு வந்துகாட்டில்
தனியாய் மாண்டாயோ அன்னை தன்னைவேண்டாயோ (தா)

வாயைமூடி இருப்பதென்மேல்
வஞ்சமோபாலா உன்னை
வணங்கமுறி செய்தேனென்று வர்மமோசீலா
எந்தன் கர்மமோபாலா (தா)

செங்கோலீயாத் தந்தையெனச்
சித்தம்நொந்தாயோ உன்னை
சிறுவயதில் விடுத்தேனெனச் சிறுமைதந்தாயோ
வருத்த அருகேவந்தாயோ (தா)

சந். வ-ம்:-ஐயோ!

சந்திரமதி தரு

துரையே உன்னைப் பறையனுகச் செய்தானே
ஓ ஓ பாழும் பிரம்மன்
தொல்லுல கரசர் அல்லும் பகலுமே
வல்லவா நின்புகழ் சொல்லுவதும் போச்சே து

சந். வ-ம்:-நாதா! தங்களையறியாது வீணுகத் தூஷித்தேனே?

அரி. வ-ம்:-பெண்ணே! என்னை அடிமைகொண்ட ஆண்டையின் வாக்கு தவறலாகாது. ஆதலால் உன்னை அடிமைகொண்ட அய்யரிடம் சென்று காற்பணமும் முழத்துண்டும் வாங்கி வருவாய்.

[பொது வ-ம்:-சந்திரமதி காலகண்டய்யரிடம் சென்று வரும் வழியில் கௌசிகரின் மாய்கையால் காசிராஜன் பிள்ளையின் கழுத்தை முறித்து வழியில் போட்டிருக்க அதின்நிமித்தம் சந்திரமதியை பொய்குற்றம் காட்டி அரிச்சந்திரனிடத்தில் வெட்டுகிறதற்கு தோட்டி கொண்டுவந்து சந்திரமதியை விட்டுபோகிறுன்.]

அரிச்சந்திரன் தரு

(இராகம் - சகானு, தாளம் - ரூபகம்)

விதியோ முனிசதியோ காலகதியோயிது பரனே
மதிசந்திரமதியை வெட்ட வந்தவினை யரனே

நதிமேவிய சடையாகாசி நாதாவாரும் பரனே
கதியிதுவே தற்காத்திடத் தருணம்தெரி யரனே

சொல்லாள் கள்ளமில்லாள் பொய்யை விள்ளாளிவள் பானே
கல்லாகிலும் கேட்டாலிவள் சொல்லுக்கமு மானே
பிள்ளைமாண்டும் கள்ளியெனப் பெண்டீர்தனைப் பானே
உள்ளமோங்கி வெட்டலானேன் உந்தன்செய லரனே (அ)

அரி. வ-ம்:-அடி என் பிராண நாயகி! விதியை வெல்லப் போகாது, காசிவிஸ்வேசனை மனதில் நினைத்திருப்பாயடி.

[சந்திரமதியை வெட்ட நோக்குகிறுன், விஸ்வாமித்திரன் வருகிறுன்]

விஸ். வ-ம்:-அரிச்சந்திரா! வேண்டாம் நில் நில்.

அரிச்சந்திரன் தரு

(இராகம்-மோகனம், தாளம்-ஆதி)

போம்போ மிதுவுங் கனமா எனக்குப்புத்தி
புகட்டுவ திந்தத் தினமா
தாம்பழி சுமந்ததும் தனையனைத் துறந்ததும்
தானே யறிந்துமிங்கே தணிவா யுரைக்கவந்தீர் (போ)

நாடு நகரம்வீடு நல்ல பணிதளம்
நயமுடன் நீரிருக்கத் தந்தேன் மனம்
வாடும்படிக்கேயன்று வருத்தகாவியைத்தொட்டு
வளர்காசி மாதுடனே வந்தேன்
பாவித் தரகன்செய்யப் பதைத்தேன் மனங்கனிந்து
பத்தினி தன்னையும்நானே பாங்காய் விற்றதறிந்தும் (போ)

தரகன்கூலிக் காகவென்னைத் தான்பற்றி வருத்திட
தாழ்ந்தகுலத்திற் காளாய் நின்றேன் உம்மால்
காமதில் சூரிதாங்கிக் கன்றுக்குட்டி யறுக்தேன்
கால்வேறு தலைவேருய் அன்றே
பாமனைப் பணிவோரே பதிவாய்ச் சுடலை தந்தீர்
பகரொணு கோரங்கண்டும் பாசாங்கு பேசவந்தீர் (போ)

கொடுத்ததை யில்லையென்று கோரமொழி என்நாவால்
கோணுதுரைக்கமொழி கொள்ளேன் நான்
எடுத்த விரதமதை இவ்வுடலழியினும்
இனியொருகால் பொய்யை விள்ளேன்
தடுத்துதடுத்து இன்னும் தான்சோதிக்கவு மானீர்
தாமோ எனது எதிர் திறமோ வருவதுநீர் (போ)

பொது. வ-ம்:-பிறகு விஸ்வாமித்திரர் போய்விடுகிருர், பாமசிவன் முதலானவர் வந்து பழையபடி அவர்களின் ராஜ்யத்தை தாப்பெற்றுச் சுகமாக வாழ்கின்ருர்கள்.

[எல்லோரும் ஒன்று சேர்ந்து]

தேவாரம்

பித்தா பிறைசூடி பெருமானே யருளாளா
வெத்தான்மற வாதேநினைக் கின்றேன்மனத் துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்
அத்தாவுனக் காளாயினி யல்லேனென லாமே. [டுறையுள்

வாழி விருத்தம்

கங்கைநா டாளுமரிச் சந்திரன்வாழி
காந்திமுகச் சந்திரமதி சுதனும்வாழி
பொங்குமருள் மொழிக்குமரன் திருமால்வாழி
பொருளறிய நால்வேத முதலாந்தேவர்
சங்கையற வாழியிதைப் படிப்போர் கேட்போர்
சத்தியமே மெய்ப்பொருளாய்த் தரித்தாரோடு
மங்களமாய் அச்சிட்ட மலர்மகள் விலாசத்தோர்
மண்டலத்தில் வாழியென்றும் வாழிதானே.

சம்பூர்ண அரிச்சந்திரா முற்றிற்று.

பதிப்பாளர்:—
அமரம்பேடு. இராஜரத்தின முதலியார்
மலர்மகள் விலாசம் பிரஸ்
நெ. 23, தாண்டவராயப்பிள்ளை வீதி, சென்னை-1.